# TECIYA KITANKAL

BARATHIAR

2x

வெளியீடு: எகஅ

# பாரதியார்
# தசீய கீதங்கள்

CIYA GITANKAL

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1957
MADRAS

BRAMANIA BHARATIAR

திருநெல்வேலித் தென்னிந்திய
சவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
ருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Sept., 1955.

# NATIONAL SONGS

By

C. Subramanya Barathiar

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 2000.

CONN... LIBRARY
1 - MAY 57
MADRAS

# பதிப்புரை

நாடே மக்களுக்கு உயிர்; அந்நாடு தன்னுரிமைபெற்ற நாடாகத் திகழ்தல் வேண்டும். உரிமை பெறாத நாடு, நாடாகாது; அந் நாட்டில் பசியும் பிணியும் பகையும் நிலைத்துநின்று மக்களைவாட்டும். எனவே, ஒரு நாடு, பிற எந்த நாட்டையும் எதற்கும் நாடாத நாடாக அமைதலே சிறந்தது. இதனை,

> 'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரும் நாடு'

எனச் சிறப்புரைப்பர் வள்ளுவர் பெருமகனார்.

நம் இந்திய நாடு, வெள்ளையர்க்கு அடிமையாயிற்று; ஆங்கிலமொழி வீறுகொண்டது; நாட்டுமொழிகள் தலை சாய்ந்தன. உயர்ந்தோர் மேலும் உயர்ந்தனர்; தாழ்ந்தோர் கீழே மேலும் தாழ்த்தப்பட்டனர். பிற நாட்டுப் பழக்க வழக்கங்கள் வேரூன்றின; நம் நாட்டுப்பண்பு பாழ்பட்டன.

இக்காலத்தே சேய இளம்பரிதியென பாண்டிவள நாட்டில் எட்டையபுர நகரில் தோன்றினார், நம் உரிமைக் கவி பாரதியார். நம் தாய்மொழியாம் தமிழும் அக்கால ஆட்சிமொழியாம் ஆங்கிலமும் கற்றார். அக்காலத்தையே தேசிய உணர்வு, சுருணீக்கி மலரும் பருவமாக உள்ளத் தடத்தே பாரதியார்க்கு அலர்ந்தது. அது காலை, நம்நாடு திலகர் பெருமான், காந்தியடிகள் போன்ற விடுதலை வீரர்களின் வழியாக நாட்டுவிடுதலை இயக்கம் கால்கொண்டெழுந்தது. விடுதலை நாடியது கவியுள்ளம். ஆகவே,

பாரதியார் அதன் வழியே சென்றார்; படர்ந்தார்; நாட்டு விடுதலைப் போரில் பங்குகொண்டார். அக்காலைப் பலப்பல இடங்களில் பாடிய பாடல்களே பாரதியார் பாடலெனப் பெயரிய நூல். இந்நூலின் ஒரு பகுதியே தேசிய கீதங்கள் என்னும் இவ்வரிய பாடல்கள் செறிந்த நூல்.

இத் தேசிய கீதங்களே அக்காலத்தே அடிமையில் அடங்கிக் கிடந்த முடலை மக்களையும் விழிப்பூட்டி நாட்டு விடுதலை இயக்கத்தில் இறங்கித் தொண்டாற்றச் செய்தவை. இப்பாடல்கள் யாவும் எளிமையும் இனிமையும் இசைப் பண்பும் கெழுமியவை; கற்றார்க்கு உணர்வை ஊட்டுபவை. இப் பாடல்கள் பின் நிகழ்பவைகளை ஏற்கெனவே தம் நுண்ணுணர்வுகொண்டு நுனித்துணர்ந்து செறித்து வைத்த பெட்டகம்போல்வனவுமாகும்.

கவிகள், உள்ளுவனயாவும் உயர்வையே உள்ளுவர். அம்முறையில் நம்கவி, நம்நாடு விடுதலைபெறுவது, தொழில் முன்னேற்றம், அன்பு, பண்பு, அறம், வீரம் முதலியன யாவும் அமைதல் வேண்டுமெனக் கொண்ட உளக்கருத்தால் ஆங்காங்கே பாவாக அமைத்துக் காட்டினர். அன்று அவர் கண்ட கனவு, இன்று நனவாக—உண்மையாக மலர்ந்து நிற்பது, வியத்தற்குரிய தொன்றும். காட்டாக:

"ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்"

என்றும்,

"குடைகள் செய்வோம்; உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம்; இரும்பாணிகள் செய்வோம்;

நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்."

என்றும்,

"மந்திரம் கற்போம்; வினைத் தந்திரம் கற்போம்;
வானை யளப்போம்; கடல்மீனை யளப்போம்;
சந்திரமண் டலத்தியல் கண்டு தெளிவோம்;
சந்தி, தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்."

என்றும் கூறுவன காண்க. அன்று நாட்டில் செய்ய இயலாத பல தொழில்கள் இக்கால் செய்யப்பெற்று நாளுக்கு நாள் வளர்ச்சியுற்று வருதலால் பாரதியாரின் எதிர்கால நோக்குணர்வு அறிந்தின்புறற்பாலது.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று"

என்று பள்ளுப் பாடினார், நாடு விடுதலை பெறுமுன்பே. நாடு விடுதலைகொண்டு இன்று மிளிர்தலை யறிகின்றோம்.

தமிழ்மொழி வளர்ச்சிக்குக் காலத்துக் கேற்றவாறு கலைகள் பெருகுதல் வேண்டும். கலையின்றேல் மொழி நிலைபேறுறாது; ஒரு நாட்டுக்குக் கலையே கண், இதனை நம் பாரதியார் கண்டுணர்ந்தார். தமிழ்த்தாய் கூற்றாக அமைத்து,

"புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ்மொழிக் கில்லை
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ
இந்த வசையெனக் கெய்திடல் ஆமோ ?
சென்றிடு வீரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"

என்று கூறுவதில் அவர்தம் தமிழார்வம் கரைபுரண்டும் வெள்ளம்போல் கால்கொண்டும் ஓடுதலை யறியலாம்.

பின்னும் ஆங்காங்கே நாட்டுக்கு எழுச்சியூட்டிய பாடல்கள் பல. இவையிற்றின் இன்பம், அன்பின் அலையலை யாகக் காட்டாற்று வெள்ளமாகக் காட்சியளித்தலைக் காணலாம்.

பாரதியார் பாடல்களுள் முதற்கண் இத்தேசிய கீதங் களை எம் கழகவழியாக நன்முறையில் பதிப்பித்து வெளியிடு கின்றோம். ஏனைய பாடல்கள் யாவும் தொடர்ந்து வெளியிட எண்ணியுள்ளோம்.

நம் தமிழ்நாட்டு மக்கள், இதனையும் இதைத் தொடர்ந்து வெளியிடவிருக்கும் பாரதியார் ஏனைய நூல்களையும் வாங்கி யும் வாங்குவித்தும் கற்றும் கற்பித்தும் எல்லோருடைய கையகத்தும் நாவகத்தும் இப் பாடல்கள் நடம்புரியச் செய்து, எம்மையும் ஊக்குவித்து ஆக்கஞ் செய்வார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

CONNEMARA LIBRARY
1 - MAY 1957
MADRAS

# உள்ளுறை

பக்கம்

I. பாரத நாடு

1. வந்தே மாதரம் 1
2. வந்தே மாதரம் 2
3. நாட்டு வணக்கம் 3
4. பாரத நாடு 4
5. பாரத தேசம் 5
6. எங்கள் நாடு 7
7. ஜய பாரத! 8
8. பாரத மாதா 10
9. எங்கள் தாய் 11
10. வெறிகொண்ட தாய் 13
11. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி 14
12. பாரதமாதா நவரத்தின மாலை 15
13. பாரத தேவியின் திருத் தசாங்கம் 19
14. தாயின் மணிக்கொடி 21
15. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை 23
16. போகின்ற பாரதமும்—வருகின்ற பாரதமும் 25
17. பாரத ஸமுதாயம் 27
18. ஜாதீய கீதம்—I (மொழிபெயர்ப்பு) 28
19. ஜாதீய கீதம்—II (புதிய மொழிபெயர்ப்பு) 29

II. தமிழ் நாடு

20. செந்தமிழ் நாடு 31
21. தமிழ்த்தாய் 32
22. தமிழ் 34
23. தமிழ்மொழி வாழ்த்து 36
24. தமிழ்ச் சாதி ,,
25. வாழிய செந்தமிழ் 40

| | | பக்கம் |
|---|---|---|
| III. | சுதந்திரம் | |
| 26. | சுதந்திரப் பெருமை | 41 |
| 27. | சுதந்திரப் பயிர் | 42 |
| 28. | சுதந்திர தாகம் | 44 |
| 29. | சுதந்திர தேவியின் துதி | „ |
| 30. | விடுதலை | 46 |
| 31. | சுதந்திரப் பள்ளு | 47 |
| IV. | தேசீய இயக்கப் பாடல்கள் | |
| 32. | சத்ரபதி சிவாஜி | 49 |
| 33. | கோக்கலே சாமியார் பாடல் | 54 |
| 34. | தொண்டு செய்யும் அடிமை | 55 |
| 35. | நம்ம ஜாதிக்கடுக்குமோ? | 56 |
| 36. | நாம் என்ன செய்வோம்! | 57 |
| 37. | பாரத தேவியின் அடிமை | 58 |
| 38. | வெள்ளைக்கார விஞ்ச்துரை கூற்று | 59 |
| 39. | தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி | 60 |
| 40. | நடிப்புச் சுதேசிகள் | 61 |
| V. | தேசீயத் தலைவர்கள் | |
| 41. | மஹாத்மா காந்தி பஞ்சகம் | 65 |
| 42. | குரு கோவிந்தர் | 66 |
| 43. | தாதாபாய் நவுரோஜி | 72 |
| 44. | பூபேந்திரர் விஜயம் | 74 |
| 45. | வாழ்க திலகன் நாமம் | 75 |
| 46. | திலகர் முனிவர்கோன் | 76 |
| 47. | லாஜபதி | „ |
| 48. | லாஜபதியின் பிரலாபம் | 77 |
| 49. | வ. உ. சி.-க்கு வாழ்த்து | 79 |
| VI. | பிறநாடுகள் | |
| 50. | மாஜினியின் சபதம் | 80 |
| 51. | பெல்ஜியத்திற்கு வாழ்த்து | 84 |
| 52. | புதிய ருஷியா | 86 |
| 53. | கரும்புத் தோட்டத்திலே | 87 |

CONNEMARA PUBLIC LIBRARY
1 - MAY 1907
MADRAS

# தேசீய கீதங்கள்

## I. பாரத நாடு

### 1. வந்தே மாதரம்

*(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு)*

இராகம்: *நாதநாமக்கிரியை.* தாளம்: *ஆதி.*

பல்லவி

*வந்தே மாதரம் என்போம்—எங்கள்*
*மாநிலத் தாயை வணங்குதும் என்போம்.* (வந்தே)

சரணங்கள்

1. *ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்*
*ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்,*
*வேதிய ராயினும் ஒன்றே—அன்றி*
*வேறு குலத்தின ராயினும் ஒன்றே.* (வந்தே)

2. *ஈனப் பறையர்க ளேனும்—அவர்*
*எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ ?*
*சீனத்த ராய்விடு வாரோ ?—பிற*
*தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ ?* (வந்தே)

3. *ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்*
*அன்னியர் வந்து புகல்என்ன நீதி ?—ஓர்*
*தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முள்*
*சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ ?* (வந்தே)

4. ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே;
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்? (வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம். (வந்தே)

6. புல்லடி மைத்தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி. (வந்தே)

## 2. வந்தே மாதரம்

இராகம்: ஹிந்துஸ்தானி பியாக். தாளம்: ஆதி.

பல்லவி

வந்தே—மாதரம்—ஜய
வந்தே மாதரம்.

சரணங்கள்

1. ஜயஜய பாரத
ஜயஜய பாரத
ஜயஜய பாரத
ஜயஜய ஜயஜய. (வந்தே)

2. ஆரிய பூமியில்
நாரிய ரும்நர
சூரிய ரும்சொலும்
வீரிய வாசகம். (வந்தே)

3. நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர்—உ
வந்தே சொல்வது. (வந்தே)

4. ஒன்றாய் நின்றினி
வென்றா யினுமுயிர்
சென்றா யினும்வலி
குன்றா தோதுவம் (வந்தே)

## 3. நாட்டு வணக்கம்

*('வந்தே மாதரம்')*

இராகம்: *காம்போதி.* தாளம்: *ஆதி.*

1. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி, என்
வாயுற வாழ்த்தேனோ?—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

2. இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து, அருள்
ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்

பொன்னுடல் இன்புற நீர்விளை யாடி, இல்
போந்ததும் இந்நாடே—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

3. மங்கைய ராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே—அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவியது இந்நாடே—மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

## 4. பாரத நாடு

இராகம்: ஹிந்துஸ்தானி தோடி.

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

1. ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்தி லேஅன்ன தானத்திலே
கானத்தி லேஅமு தாக நிறைந்த
கவிதையி லேஉயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்தி லேபடை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே,
சாரத்தி லேமிகு சாத்திரங் கண்டு
தருவதி லேஉயர் நாடு—இந்தப் (பாரு)

3. 'ஒன்று பரம்பொருள் ; நாம் அதன் மக்கள் ; (பாரு)
உலகின்பக் கேணி' என்றே—மிக
நன்று பல்வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை.

4. சித்த மயமிவ் வுலகம், உறுதிநம் (பாரு)
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல்.

5. சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத்
தட்டி விளையாடி—நன்று (பாரு)
உகந்ததோர் பிள்ளைமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை.

6. சீருஞ் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றுள்
ஊரும் புரவிஉரை தத்தாய்!—தேரின்
பரிமிசையூர் வாளல்லள் பாரனைத்தும் அஞ்சும்
அரிமிசையே ஊர்வாள் அவள். (பாரு)

7. கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்!
செருநரைவீழ்த் தும்படையென் செப்பாய்;—பொருபவர்
தண்ணளியால் வீழாது வீழின் தகைப்பரிதாம்
திண்ணமுறு வான்குலிசம் தேறு. (பாரு)

# 5. பாரத தேசம்

(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.)

1. யோகத்தி லேநிக ரற்றவள் உண்மையும்
ஒன்றென நன்றறி வாள்—உயர்
போகத்தி லேயும் நிறைந்தவள் எண்ணரும்
பொற்குவை தானுடை யாள்.

2. சேர்ந்ததைக் காப்பது காணீர்!—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க!

3. எங்கும் இந்த ஸ்வராஜ்ய விருப்பத்தை
ஏவி னாய்;—விதை—தூவி னாய்;
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்
செய்ய வோ;—நீங்கள்—உய்யவோ?

4. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லு வேன்;—குத்திக்—கொல்லுவேன்;
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளு வேன்;—பழி—கொள்ளுவேன்.

# 6. எங்கள் நாடு

இராகம்: கமாஸ் தாளம்: ஆதி

1. நீயும் அறமும்
நிலைத்திருத்தல் மெய்யானால்,
ஓயுமுனர் எங்களுக்கிவ்
ஓர்வரம்நீ நல்குதியே.

2. சொந்தச் சகோ தரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்கா ரடீ!—கிளியே!
செம்மை மறந்தா ரடீ!

3. பஞ்சத்தும் நோய்க ளிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணாற் கண்டும்!—கிளியே!
சோம்பிக் கிடப்பா ரடீ!

4. தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா!—கிளியே!
வந்தே மாதர மென்பார்.

5. சொந்தச் சகோ தரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்கா ரடீ !—கிளியே !
செம்மை மறந்தா ரடீ !

6. பஞ்சத்தும் நோய்க ளிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணுற் கண்டும் !—கிளியே !
சோம்பிக் கிடப்பா ரடீ !

---

# 7. ஜய பாரத !

இராகம்: புன்னுகவராளி. தாளம்: ரூபகம்.

1. முன்னாளில் இராமபிரான் கோதமனு
தியபுதல்வர் முறையி னீன்று
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறுத்
தியவெமது பரத கண்ட
மின்னாள் இங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்த காலை,
அன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர்சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்.

2. நூறு கோடி நூல்கள் செய்து
நூறு தேய வாணர்கள்,
தேறும் உண்மை கொள்ள இங்கு
தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
வண்மை தீர்ந்த நாளினும்,
ஈறு நிற்கும் உண்மை யொன்று
இறைஞ்சி நிற்பள் வாழ்கவே!

3. வில்லர் வாழ்வு குன்றி ஓய
வீர வாளும் மாயவே,
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
மெய்ம்மை நூல்கள் தேயவும்,
சொல்லும் இவ்வ னைத்தும் வேறு
சூழு நன்மை யுந்தர
வல்ல நூல்கெ டாது காப்பள்
வாழி அன்னை வாழியே!

4. தேவ ருண்ணும் நன்ம ருந்து
சேர்ந்த கும்பம் என்னவும்
மேவு வார்க டற்க ணுள்ள
வெள்ள நீரை ஒப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவி லாத செல்வம் இன்னும்
ஓங்கும் அன்னை வாழ்கவே!

5. இதந்த ரும்தொ ழில்கள் செய்து
இருப்பு விக்கு நல்கினள்;
பதந்த ரற்கு ரிய வாய
பன்ம தங்கள் நாட்டினள்;
விதம்பெ றும்பல் நாட்டி னர்க்கு
வேறோர் உண்மை தோற்றவே
சுதந்தி ரத்தில் ஆசை இன்று
தோற்றி னள்மன் வாழ்கவே!

## 8. பாரத மாதா

*தான தனந்தன தான தனந்தன*
*தானனத் தானே.*

1. முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்தவில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்.

2. இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்தவில் யாருடை வில்?—எங்கள்
மந்திரத் தெய்வம் பாரத ராணி
வயிரவி தன்னுடை வில்.

3. 'ஒன்று பரம்பொருள்; நாம்அதன் மக்கள்;
உலகின்பக் கேணி' என்றே—மிக
நன்று பல்வேதம் வரைந்தகை பாரத
நாயகி தன்திருக் கை.

4. சித்த மயமிவ் வுலகம், உறுதிநம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று சொன்னசொல்
ஆரிய ராணியின் சொல்.

5. சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத்
தட்டி விளையாடி—நன்று
உகந்ததோர் பிள்ளைமுன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை.

6. காண்டிவம் ஏந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோள்எவர் தோள்?—எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரிய தேவியின் தோள்.

7. சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்தது எவர்கொடைக் கை ?—சுவைப்
பாகுமொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை.

8. போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்றது எவருடை வாய் ?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்.

9. தந்தை இனிதுறத் தான்அர சாட்சியும்
தையலர் தம்முறவும்—இனி
இந்த உலகில் விரும்புகிலேன் என்றது
எம்அன்னை செய்த உள்ளம்.

10. அன்பு சிவம்; உலகத்துயர் யாவையும்
அன்பினிற் போகும் என்றே—இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழிஎங்கள் அன்னை மொழி.

11. மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் மதி—தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்லநம் அன்னை மதி.

12. தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்தது எவர் கவிதை ?—அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி அருட்கவிதை.

## 9. எங்கள் தாய்

(காவடிச்சிந்தில், 'ஆறுமுகவடி வேலவனே' என்ற மெட்டு)

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.

2. யாரும் வகுத்தற் கரிய பிராயத்தள்
ஆயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருள்ள நாளுமோர் கன்னிகை என்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்.

3. முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற வொன்றுடை யாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள் எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்.

4. நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடை யாள்—தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள், தீயரை
விட்டிடு தோளுடை யாள்.

5. அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்.

6. பூமியி னும்பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.

7. கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாள்எங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரிகொண் டேழுல காளும்
ஒருவனை யுந்தொழு வாள்.

8. யோகத்தி லேநிக ரற்றவள் உண்மையும்
ஒன்றென நன்றறி வாள்—உயர்
போகத்தி லேயும் நிறைந்தவள் எண்ணரும்
பொற்குவை தானுடை யாள்.

9. நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாள்எங்கள் தாய்—அவர்
அல்லவ ராயின், அவரைவி ழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள்.

10. வெண்மை வளரிம யாசலன் தந்த
விறன்மக ளாம்எங்கள் தாய்—அவன்
திண்மை மறையினும், தான்மறை யாள்நித்தஞ்
சீருறு வாள்எங்கள் தாய்.

## 10. வெறிகொண்ட தாய்

இராகம்: ஆபோகி. தாளம்: ரூபகம்.

1. பேயவள் காண்எங்கள் அன்னை—பெரும்
பித்துடையாள் எங்கள் அன்னை;
காயழல் ஏந்திய பித்தன்—தனைக்
காதலிப்பாள் எங்கள் அன்னை. (பேயவள்)

2. இன்னிசை யாம்இன்பக் கடலில் எழுந்து
எற்றும் அலைத்திரள் வெள்ளம்
தன்னிடம் மூழ்கித் திளைப்பாள்—அங்குத்
தாவிக் குதிப்பாள்எம் அன்னை. (பேயவள்)

3. தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
தெய்விக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
தேக்கி நடிப்பாள்எம் அன்னை. (பேயவள்)

4. வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
வேல்கையிற் பற்றிக் குதிப்பாள்;
ஓதரும் சாத்திரம் கோடி—உணர்ந்
தோதி யுலகெங்கும் விதைப்பாள். (பேயவள்)

5. பாரதப் போரெனில் எளிதோ?—விறற்
பார்த்தன்கை வில்லிடை ஒளிர்வாள்
மாரதர் கோடி வந்தாலும்—கணம்
மாய்த்துக் குருதியில் திளைப்பாள். (பேயவள்)

## 11. பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி

1. பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்,
புன்மையிருட்கணம் போயின யாவும்;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கு இங்குஉன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்;
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே!
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தரு ளாயே!

2. புள்ளினம் ஆர்த்தன; ஆர்த்தன முரசம்;
பொங்கியது எங்குஞ் சுதந்திர நாதம்;
வெள்ளிய சங்கம் முழங்கின; கேளாய்!
வீதியெ லாம்அணு குற்றனர் மாதர்;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன
சீர்த்திரு நாமம் ஓதிநிற் கின்றார்;
அள்ளிய தெள்ளமு தன்னைஎம் அன்னை!
ஆருயிரே! பள்ளி யெழுந்தரு ளாயே!

3. பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்;
பார்மிசை நின்னொளி காணுதற்கு அலந்தோம்;
கருதிநின் சேவடி அணிவதற்கு என்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை, அம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத்து ஏற்றாய்!
நிர்மலை யே!பள்ளி யெழுந்தரு ளாயே!

4. நின்னெழில் விழியருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீயறி யாயோ?
பொன்னனை யாய்!வெண் பனிமுடி யிமயப்
பொருப்பினன் ஈந்த பெருந்தவப் பொருளே!
என்ன தவங்கள்செய்து எத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட்கு ஏழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ?
இன்னுயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே!

5. மதலையர் எழுப்பவும், தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவள் இஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமக ளே!பெரும் பாரதர்க்கு அரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி
வேண்டிய வாறுஉனைப் பாடுதும் காணாய்;
இதமுற வந்துஎமை ஆண்டருள் செய்வாய்!
ஈன்றவ ளே!பள்ளி யெழுந்தரு ளாயே!

## 12. பாரதமாதா நவரத்தின மாலை

### காப்பு

வீரர்முப் பத்திரண்டு கோடி விளைவித்த
பாரதமா தாவின் பதமலர்க்கே—சீரார்
நவரத்ன மாலையிங்கு நான்சூட்டக் காப்பாம்
சிவரத்ன மைந்தன் திறம்.

### வெண்பா

1. திறமிக்க நல்வயிரச் சீர்திகழும் மேனி
அறமிக்க சிந்தை, அறிவு—பிறநலங்கள்
எண்ணற் றனபெறுவார் 'இந்தியா' என்றநின்றன்
கண்ணொத்த பேருரைத்தக் கால்.

## கட்டளைக் கலித்துறை

2. காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக்
கும்பிட்டுக் கம்பனமுற்
றோலமிட் டோடி மறைந்தொழி
வான்;பகை யொன்றுளதோ?
நீலக் கடலொத்த கோலத்தி
னுள்மூன்று நேத்திரத்தாள்
காலக் கடலுக்கோர் பாலமிட்
டாள் அன்னை காற்படியே.

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

3. அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இதிஹா ஸங்கள்;
இன்னும்பல நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை இந்நாள்?
மின்னுகின்ற பேரொளிக்கண்! காலங் கொன்ற
விருந்துகாண்! கடவுளுக்கோர் வெற்றி காணே.

## இணைக்குறள் ஆசிரியப்பா

4. வெற்றி கூறுமின்! வெண்சங் கூதுமின்!
கற்றவ ராலே உலகுகாப் புற்றது;
உற்றதிங் கிந்நாள்! உலகினுக் கெல்லாம்
இற்றைநாள் வரையினும், அறமிலா மறவர்,
குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்,
மற்றை மனிதரை அடிமைப் படுத்தலே
முற்றிய அறிவின் முறையென்று எண்ணுவார்;
பற்றை யரசர் பழிபடு படையுடன்
சொற்றை நீதி தொகுத்துவைத் திருந்தார்.
இற்றைநாள்,

பாரி லுள்ள பல்நாட் டினர்க்கும்
பாரத நாடு புதுநெறி பழக்கல்
உற்றதிங் கிந்நாள்; உலகெலாம் புகழ
இன்பவ ளஞ்செறி பண்பல பயிற்றும்
கவீந்திர னாகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர்! "புவிமிசை யின்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்
தர்மமே உருவாம் மோகன தாஸ
கரம் சந்திர காந்தி"யென் றுரைத்தான்,
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனாகக் கொண்டு புவிமிசைத் தருமமே
அரசிய லதனிலும், பிறஇய லனைத்திலும்
வெற்றி தருமென வேதம் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்றார்,
பாரத மக்கள். இதனால் படைஞர்தம்
செருக்கொழிந் துலகில் அறந்திறம் பாத
கற்றோர் தலைப்படக் காண்போம் விரைவிலே.
(வெற்றி கூறுமின்; வெண்சங் கூதுமின்!)

## தரவுகொச்சகக் கலிப்பா

5. ஊதுமினோ வெற்றி!
ஒலிமினோ வாழ்த்தொலிகள்!
ஓதுமினோ வேதங்கள்!
ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச்
செம்மணிமா நெறிகண்டோம்;
வேதனைகள் இனிவேண்டா;
விடுதலையோ திண்ணமே.

## வஞ்சி விருத்தம்

6. திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை;
எண்ணங் கெடுதல் வேண்டா!
திண்ணம், விடுதலை திண்ணம்.

## கலிப்பா

7. "விடுதலைபெறு விர்விரை வாநீர்
வெற்றி கொள்ளுவிர்" என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றிநந் தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சிசெய் கின்றான்;
"சுடுத லும்குளி ரும்உயிர்க் கில்லை;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை;
எடுமி னோஅறப் போரினை" என்றான்
எங்கோ மேதக மேந்திய காந்தி!

## அறுசீர் விருத்தம்

8. காந்திசேர் பதும ராகக்
கடிமலர் வாழ்ஸ்ரீ தேவி
போந்துநிற் கின்றாள் இன்று
பாரதப் பொன்னா டெங்கும்
மாந்தரெல் லாரும் சோர்வை
அச்சத்தை மறந்து விட்டார்
காந்திசொற் கேட்டார், காண்பார்
விடுதலை கணத்தி னுள்ளே.

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

9. கணமெனு மென்றன் கண்முனே வருவாய்,
பாரத தேவியே, கனல்கால்
இணைவிழி வால வாயமாஞ் சிங்க
முதுகினில் ஏறிவீற் றிருந்தே;
துணைநினை வேண்டும் நாட்டினர்க் கெல்லாம்
துயர்கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ்திருக் கோலம்
கண்டுநான் மகிழ்ந்திடு மாறே.

# 13. பாரத தேவியின் திருத்தசாங்கம்

## நாமம்

(காம்போதி)

1. பச்சை மணிக்கிளியே! பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளியதாய் பேருரையாய்!—இச்சகத்தில்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த
பாரதமா தேவியெனப் பாடு.

## நாடு

(வஸந்தா)

2. தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானவ்பொன் னாட்டை அறிவிப்பாய்!—வானாடு
பேரிமய வெற்புமுதல் பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றே அறி.

## நகர்

(மணிரங்கு)

3. இன்மழலைப் பைங்கிளியே! எங்கள் உயிரானாள்
நன்மையுற வாழும் நகரெதுகொல்?—சின்மயமே
நானென் றறிந்த நனிபெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம்.

## ஆறு

(சுருட்டி)

4. வன்னக் கிளி! வந்தே மாதரமென் றோதுவரை
இன்னலறக் காப்பா ளியாறுரையாய்!—நன்னர்செயத்
தான்போம் வழியெலாம் தன்மமொடு பொன்விளைக்கும்
வான்போந்த கங்கையென வாழ்த்து.

### மலை

(*கானடா*)

5. சோலைப் பசுங்கிளியே! தொன்மறைகள் நான்குடையாள்
வாலை வளரும் மலைகூறாய்!—ஞாலத்துள்
வெற்பொன்றும் ஈடில்தாய் விண்ணில் முடிதாக்கும்
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு.

### ஊர்தி

(*தன்யாசி*)

6. சீருஞ் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றாள்
ஊரும் புரவிஉரை தத்தாய்!—தேரின்
பரிமிசையூர் வாளல்லள் பாரனைத்தும் அஞ்சும்
அரிமிசையே ஊர்வாள் அவள்.

### படை

(*முகாரி*)

7. கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்!
செருநரைவீழ்த் தும்படையென் செப்பாய்;—பொருபவர்மேல்
தண்ணளியால் வீழாது வீழின் தகைப்பரிதாம்
திண்ணமுறு வான்குலிசம் தேறு.

### முரசு

(*செஞ்சுருட்டி*)

8. ஆசை மரகதமே! அன்னைதிரு முன்றிலிடை
ஓசை வளர்முரசும் ஓதுவாய்!—'பேசுகவோ
சத்தியமே, செய்க தருமமே' என்றொலிசெய்
முத்திதரும் வேத முரசு.

### தார்

(*பிலகரி*)

9. வாராய் இளஞ்சுகமே! வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்கூறாய்!—சேராரை
முற்றக் குறுநகையால் முற்றுவித்துத் தாளொளிர்வாள்
பொற்றா மரைத்தார் புனைந்து.

கொடி

(கேதாரம்)

10. கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! சுத்திரமும் தீங்கும்
மடிப்பவளின் வெல்கொடி தான் மற்றென்?—அடிப்பணி
நன்றுரத் தீயார் நலிவுறவே வீசுமொளி [வார்
குன்று வயிரக் கொடி.

## 14. தாயின் மணிக்கொடி

### பாரதநாட்டுக் கொடியினைப் புகழ்தல்

*(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.)*

பல்லவி

*தாயின் மணிக்கொடி பாரீர்!—அதைத்*
*தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!*

சரணங்கள்

1. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2. பட்டுத் துகிலென லாமோ?—அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம். (தாயின்)

3. இந்திரன் வச்சிரம் ஓர்பால்—அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்
மந்திரம் நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4. கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்,
நம்பற் குரியர் அவ்வீரர்;—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பார். (தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோர் ஆனந்தம் அன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறல்
பைந்திரு வோங்கும் வடிவமும் காணீர்! (தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,

7. கன்னடர் ஒட்டிய ரோடு,—போரில்
காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யார்இந்து ஸ்தானத்து மல்லர்,

8. பூதலம் முற்றிடும் வரையும்—அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்,
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரு கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்,
துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்,

10. சேர்ந்ததைக் காப்பது காணீர்!—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

## 15. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

நொண்டிச்சிந்து

1. நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே;
வஞ்சனைப் பேய்கள் என்பார்—இந்த
மரத்தில் என்பார்; அந்தக் குளத்தில் என்பார்;
துஞ்சுது முகட்டில் என்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)

2. மந்திர வாதி என்பார்—சொன்ன
மாத்திரத்தி லேமனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனியங்கள்—இன்னும்
எத்தனை ஆயிரம் இவர்துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவர் உலகத்தில் அரசரெல்லாம்;
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்சம் அயர்வார்.
(நெஞ்சு)

3. சிப்பாயைக் கண்டு அஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கி கொண்டு ஒருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்துநிற்பார்;
எப்போதும் கைகட்டுவார்-இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார். (நெஞ்சு)

4. நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
கொஞ்சமோ பிரிவினைகள் ?—ஒரு
கோடி என்றால்அது பெரிதாமோ ?

ஐந்து தலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறு தலை யென்று மகன் சொல்லிவிட்டால்,
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

5. சாத்திரங்கள் ஒன்றும் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள்சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றா யிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்;
தோத்திரங்கள் சொல்லி அவர்தாம்—தமைச்
சூதுசெய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்,
ஆத்திரம் கொண்டே இவன் சைவன்—இவன்
அரிபக்தன் என்றுபெருஞ் சண்டையிடுவார். (நெஞ்சு)

6. நெஞ்சு பொறுக்கு திலையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்கு திலையே;
கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்து,
துஞ்சி மடிகின் றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே. (நெஞ்சு)

7. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்;
கண்ணிலாக் குழந்தை கள்போல்—பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக்கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடி நயந்துநின்று,
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார். (நெஞ்சு)

## 16. போகின்ற பாரதமும்—வருகின்ற பாரதமும்

### போகின்ற பாரதத்தைச் சபித்தல்

1. வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பி லேஒ டுங்கினாய் போ போ போ
பொலிவி லாமு கத்தினாய் போ போ போ
பொறி யிழந்த விழியினாய் போ போ போ
ஒலியி ழந்த குரலினாய் போ போ போ
ஒளியி ழந்த மேனியாய் போ போ போ
கிலிபி டித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ.

2. இன்று பார தத்திடை நாய்போல
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்று கூறி லஞ்சுவாய் போ போ போ
நாணி லாது கெஞ்சுவாய் போ போ போ
சென்று போன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழிம யங்கி நோக்குவாய் போ போ போ.

3. வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய், மெய்கூறும்
நூலி லொத்தி யல்கிலாய் போ போ போ
மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ
சேறுபட்ட நாற்றமும் தூறுஞ்சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ.

4. ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தரும மொன்றி யற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய் காசொன்று
நீட்டி னுல்வ ணங்குவாய் போ போ போ

தீது செய்வ தஞ்சிலாய் நின்முன்னே
தீமை நிற்கி லோடுவாய் போ போ போ
சோதி மிக்க மணியிலே காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை போ போ போ.

## வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

5. ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிப டைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறு போல்ந டையினாய் வா வா வா.

6. மெய்மை கொண்ட நூலையே அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா.
பொய்மை கூற லஞ்சுவாய் வா வா வா
பொய்மை நூல்க ளெற்றுவாய் வா வா வா
நொய்மை யற்ற சிந்தையாய் வா வா வா
நோய்க ளற்ற உடலினாய் வா வா வா
தெய்வ சாபம் நீங்கவே, நங்கள்சீர்த்
தேச மீது தோன்றுவாய் வா வா வா.

7. இளைய பார தத்தினாய் வா வா வா
எதிரி லாவ லத்தினாய் வா வா வா
ஒளியி ழந்த நாட்டிலே முன்போலே
உதய ஞாயி றொப்பவே வா வா வா
களையி ழந்த நாட்டிலே முன்போலே
கலைசி றக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் பார்த்தன்போல்
விழியி னால்வி ளக்குவாய் வா வா வா.

8. வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநய நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர்மு கத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதி யதியற் றுவாய் வா வா வா
ஒற்று மைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒருபெ ருஞ்செயல் செய்வாய் வா வா வா.

## 17. பாரத ஸமுதாயம்

இராகம் : *பியாக்.* தாளம் : *திஸ்ர ஏகதாளம்.*

### பல்லவி

*பாரத ஸமுதாயம் வாழ்கவே!—வாழ்க வாழ்க!*
*பாரத ஸமுதாயம் வாழ்கவே!—ஜய ஜய ஜய!*

### அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் ஸங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத ஸமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை—வாழ்க (பாரத)

### சரணங்கள்

1. மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனி யுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனி யுண்டோ?—நம்மி லந்த
வாழ்க்கை இனி யுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு;

கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின்றித் தரு நாடு—இது
கணக்கின்றித் தரு நாடு—நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு—வாழ்க! (பாரத)

2. இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்—வாழ்க! (பாரத)

3. "எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என்றுரைத்தான் கண்ண பெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும்நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்——ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க! (பாரத)

4. எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்,
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க! (பாரத)

## 18. ஜாதீய கீதம்—I

பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய

"வந்தே மாதரம்" கீதத்தின் மொழிபெயர்ப்பு

1. இனியநீர்ப் பெருக்கினை! இன்கனி வளத்தினை!
தனிநறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை! (வந்தே)

2. வெண்ணிலாக் கதிர்மகிழ் விரித்திடும் இரவினை!
மலர்மணிப் பூத்திகழ் மரன்பல செறிந்தனை!
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை!
நல்குவை இன்பம், வரம்பல நல்குவை! (வந்தே)

3. முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடிதோ ளுயர்ந்துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினை போற்றி!
பொருந்தலர் படைப்புறத் தொழித்திடும் பொற்பினை!
(வந்தே)

4. நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே இதயம், நீயே மருமம்!
உடலகத் திருக்கும் உயிருமன் நீயே! (வந்தே)

5. தடந்தோ ளகலாச் சக்திநீ அம்மே!
சித்தம் நீங்காதுறு பக்தியும் நீயே!
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்விக வடிவமும் தேவியிங் குனதே! (வந்தே)

6. ஒருபது படைகொளும் உமையவள் நீயே!
கமலமெல் லிதழ்களிற் களித்திடுங் கமலை நீ!
வித்தை நன்கருளும் வெண்மலர்த் தேவி நீ! (வந்தே)

7. போற்றி வான்செல்வி! புரையிலை, நிகரிலை;
இனியநீர்ப் பெருக்கினை, இன்கனி வளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி! (வந்தே)

## 19. ஜாதீய கீதம்—II

### புதிய மொழிபெயர்ப்பு

1. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
குளிர்பூந் தென்றலும், கொழும்பொழிற் பசுமையும்
வாய்ந்துநன் கிலகுவை வாழிய அன்னை! (வந்தே)

2. தெண்ணில வதனிற் சிலிர்த்திடும் இரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்,
புன்னகை ஒளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களும் நல்குவை. (வந்தே)

3. கோடி கோடி குரல்கள் ஒலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கிமுன் னிற்கவும்,
'கூடு திண்மை குறைந்தனை' என்பதென் ?
ஆற்றலின் மிகுந்தனை அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை.
(வந்தே)

4. அறிவுநீ, தருமம்நீ, உள்ளம்நீ, அதனிடை
மருமம்நீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர்நீ,
தோளிடை வன்புநீ, நெஞ்சகத்து அன்புநீ,
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம், தேவி இங்குனதே. (வந்தே)

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னைநீ! (வந்தே)

திருநிறைந்தனை, தன்னிக ரொன்றிலை!
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை;
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற்றொ ளிர்ந்தனை, பல்பணி பூண்டனை;
இருநி லத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய்நின் பதங்கள் இறைஞ்சுவாம்! (வந்தே)

# II. தமிழ்நாடு

## 20. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. (செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர்போல்—இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள்வரையே—நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு. (செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

9. விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு. (செந்தமிழ்)

10. சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு. (செந்தமிழ்)

## 21. தமிழ்த்தாய்

### தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்

*(தாயுமானவர் ஆனந்தக்களிப்புச் சந்தம்)*

1. ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

2. மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்;
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கன்னையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார்—இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்;
நேத்திரங் கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான்—முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான்.

6. கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

7. தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலியாலும்
இந்தக் கணமட்டும் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன்—இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

9. "புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

10. சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

11. என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடுவிர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

12. தந்தை அருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்,
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.

## 22. தமிழ்

1. யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்குங் காணோம்;
பாமரராய், விலங்குகளாய்,
உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்
பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக்
கொண்டுஇங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்,
இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மை வெறும்
புகழ்ச்சி யில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்;
ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

3. பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய
புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே
பழங்கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை;
திறமான புலமையெனில்
வெளிநாட்டோர் அதைவணக்கஞ்
செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி
யுண்டாயின் வாக்கினிலே
ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல்
கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும்
மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்
குருடரெலாம் விழிபெற்றுப்
பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின்
சுவைகண்டார் இங்கமரர்
சிறப்புக் கண்டார்.

## 23. தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தா னே.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

## 24 தமிழச் சாதி

இணைக்குறள் ஆசிரியப்பா

* * * * *

எனப்பல பேசி இறைஞ்சிடப் படுவதாய்,
நாட்பட நாட்பட நாற்றமும் சேறும்
பாசியும் புதைந்து பயன்நீர் இலதாய்
நோய்க்களமாகி அழிகெனும் நோக்கமோ?
விதியே, விதியே, தமிழச் சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?

சார்வினுக் கெல்லாம் தகத்தக மாறித்
தன்மையும் தனது தருமமும் மாயாது
என்றுமோர் நிலையா யிருந்துநின் அருளால்
வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடு வாயோ?
தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்துமற்று
உள்ளுறு தருமமும் உண்மையும் மாறிச்
சிதைவுற் றழியும் பொருள்களில் சேர்ப்பையோ?
அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?
வானுறு மீனோ? மாளிகை விளக்கோ?
கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?
விதியே தமிழச் சாதியை, எவ்வகை
விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்.
ஏனெனில்,
"சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
'எல்லையொன் றின்மை' எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்தது" என்று
உறுதிகொண் டிருந்தேன். ஒருபதி னாயிரம்
சனிவாய்ப் பட்டும் தமிழச் சாதிதான்
உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்
கண்டு எனது உள்ளம் கலங்கிடா திருந்தேன்.
ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்
தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்
பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள
பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய
தமிழச் சாதி, தடியுதை யுண்டும்
காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்
வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்
பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது
செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்
பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்

நாட்டினைப் பிரிந்த நலிவினுற் சாதலும்
இஃதெலாங் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்;
'தெய்வம் மறவார்; செயுங்கடன் பிழையார்;
'ஏதுதான் செயினும், ஏதுதான் வருந்தினும்,
இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவார்'
என்பதென் னுளத்து வேரகழ்ந் திருத்தலால்.
எனினும்,
இப்பெருங் கொள்கை இதயமேற் கொண்டு
கலங்கிடா திருந்த எனைக்கலக் குறுத்தும்
செய்தியொன் றதனைத் தெளிவுறக் கேட்பாய்;
ஊனமற் றெவைதாம் உறினுமே பொறுத்து,
வானம் பொய்க்கின் மடிந்திடும் உலகுபோல்,
தானமும் தவமுந் தாழ்ந்திடல் பொறுத்து,
ஞானமும் பொய்க்க நசிக்குமோர் சாதி.
சாத்திரங் கண்டாய் சாதியின் உயிர்த்தலம்;
சாத்திர மின்றேற் சாதி யில்லை.
பொய்மைச் சாத்திரம் புகுந்திடின் மக்கள்
பொய்மை யாகிப் புழுவென மடிவர்;
நால்வகைக் குலத்தார் நண்ணுமோர் சாதியில்,
அறிவுத் தலைமை யாற்றிடுந் தலைவர்—
மற்றிவர் வகுப்பதே சாத்திர மாகும்—
இவர்தாம்,
உடலும் உள்ளமும் தம்வச மிலராய்
நெறிபிழைத் திகழ்வுறு நிலைமையில் வீழினும்,
பெரிதிலை; பின்னும் மருந்திதற் குண்டு;
செய்கையுஞ் சீலமுங் குன்றிய பின்னரும்
உய்கைக் குரிய வழிசில உளவாம்.
மற்றிவர்,
சாத்திரம்—(அதாவது, மதியிலே தழுவிய
கொள்கை, கருத்து, குளிர்ந்திடு நோக்கம்)—
ஈங்கிதில் கலக்க மெய்திடு மாயின்,
மற்றதன் பின்னர் மருந்தொன்று இல்லை.
இந்தநாள் எமது தமிழ்நாட் டிடையே
அறிவுத் தலைமை தமதெனக் கொண்டார்

தம்மிலே இருவகை தலைப்படக் கண்டேன்;
ஒரு சார்,
'மேற்றிசை வாழும் வெண்ணிற மாக்களின்
செய்கையும் நடையும் தீனியும் உடையும்
கொள்கையும் மதமும் குறிகளும் நம்முடை
யவற்றினுஞ் சிறந்தன; ஆதலின், அவற்றை
முழுதுமே தழுவி மூழ்கிடி னல்லால்,
தமிழச் சாதி தரணிமீ திராது.
பொய்த்தழி வெய்தல் முடி' பெனப் புகலும்.
நன்றடா! நன்று நாமினி மேற்றிசை
வழியெலாந் தழுவி வாழ்குவம் எனிலோ,
'ஏ ஏ! அஃதுமக் கிசையா' தென்பர்;
'உயிர்தரு மேற்றிசை நெறிகளை உவந்துநீர்
தழுவிடா வண்ணந் தடுத்திடும் பெருந்தடை
பல. அவை நீங்கும் பான்மைய வல்ல'
என்றருள் புரிவர். இதன் பொருள் சீமை
மருந்துகள் கற்ற மருத்துவர் தமிழச்
சாதியின் நோய்க்குத் தலையசைத் தேகினர்'
என்பதே யாகும்; இஃதொரு சார்பாம்.
பின்னொரு சார்பினர் வைதிகப் பெயரொடு
நமதுமூ தாதையர் (நாற்பதிற் றாண்டின்
முன்னிருந் தவரோ? முந்நூற் றாண்டிற்கு
அப்பால் வாழ்ந்தவர் கொல்லோ? ஆயிரம்
ஆண்டின் முன்னவரோ ஐயா யிரமோ?
பவுத்தரே நாடெல்லாம் பல்கிய காலத்
தவரோ? புராண மாக்கிய காலமோ?
சைவரோ? வைணவ சமயத் தாரோ?
இந்திரன் தானே தனிமுதற் கடவுள்
என்றுநம் முன்னோர் ஏத்திய வைதிகக்
காலத் தவரோ? கருத்திலா தவர்தாம்
எமது மூதாதைய ரென்பதிங் கெவர்கொல்?)
நமதுமூ தாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே

தழுவிடின் வாழ்வு தமிழர்க் குண்டு;
எனில், அது தழுவல் இயன்றிடா வண்ணம்
கலிதடை புரிவன், கலியின் வலியை
'வெல்ல லாகா' தென விளம்புகின் றனரால்.
நாசங் கூறும் 'நாட்டு வயித்தியர்'
இவராம். இங்கிவ் விருதலைக் கொள்ளியி
னிடையே நம்மவர் எப்படி உய்வர்?
விதியே! விதியே! தமிழச் சாதியை
என்செயக் கருதி யிருக்கின் றாயடா?

### விதி

மேலே நீ கூறிய விநாசப் புலவரை
நம்மவர் இகழ்ந்து நன்மையும் அறிவும்
எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்
மற்றவை தழுவி வாழ்வி ராயின்,
அச்சமொன்று இல்லை. ஆரிய நாட்டின்
அறிவும் பெருமையும்... ... ...

* * * *

## 25. வாழிய செந்தமிழ்

நிலைமண்டில ஆசிரியப்பா

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மைவந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம்வளர்ந் திடுக! மறம்மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

# III. சுதந்திரம்

## 26. சுதந்திரப் பெருமை

*("தில்லை வெளியிலே கலந்துவிட் டாலவர்
திரும்பியும் வருவாரோ?" என்னும் வர்ணமெட்டு)*

1. வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ? (வீர)

3. பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
பெற்றியை அறிந்தாரேல்—மானம்
துறந்தறம் மறந்தும்பின் உயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ? (வீர)

4. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை உணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

7. வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ? (வீர)

## 27. சுதந்திரப் பயிர்

### கண்ணிகள்

1. தண்ணீர்விட் டோ வளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்;
கருகத் திருவுளமோ?

2. எண்ணமெலாம் நெய்யாக
எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது
மடியத் திருவுளமோ?

3. ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போலவந்த
மாமணியைத் தோற்போமோ?

4. தர்மமே வெல்லுமெனும்
சான்றோர்சொற் பொய்யாமோ?
கர்ம விளைவுகள்யாம்
கண்டதெலாம் போதாதோ?

5. மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ?

6. எண்ணற்ற நல்லோர்
இதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற்
கலங்குவதுங் காண்கிலையோ

7. மாதரையும் மக்களையும்
வன்கண்மை யாற்பிரிந்து
காதலிளைஞர்
கருத்தழிதல் காணுயோ ?

8. எந்தாய் ! நீ தந்த
இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி
நோவழிப்பார் யாருளரோ ?

9. இன்பச் சுதந்திரம்நின்
இன்னருளாற் பெற்றதன்றோ ?
அன்பற்ற மாக்கள்
அதைப்பறித்தாற் காவாயோ ?

10. வானமழை யில்லையென்றால்
வாழ்வுண்டோ ? எந்தை சுயா
தீனமெமக் கில்லை யென்றால்
தீனரெது செய்வோமே ?

11. நெஞ்சகத்தே பொய்யின்றி
நேர்ந்ததெலாம் நீதருவாய்
வஞ்சகமோ எங்கள்
மனத்தூய்மை காணுயோ !

12. பொய்க்கோ உடலும்
பொருளுயிரும் வாட்டுகிறோம் ?
பொய்க்கோ தீராது
புலம்பித் துடிப்பதுமே !

13. நின்பொருட்டு நின்னருளால்
நின்னுரிமை யாங்கேட்டால்,
என்பொருட்டு நீதான்
இரங்கா திருப்பதுவே ?

14. இன்று புதிதாய் இரக்
கின்றோமோ ? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த
அருமையெலாம் ஓராயோ ?

15. நீயும் அறமும்
நிலைத்திருத்தல் மெய்யானால்,
ஓயுமுனர் எங்களுக்கிவ்
ஓர்வரம்நீ நல்குதியே.

## 28. சுதந்திர தாகம்

இராகம்: கமாஸ் தாளம்: ஆதி

1. என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும்எங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொரு பாரதம் ஆக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை ஆதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடியோம் இன்னும் வாடுதல் நன்றோ?

2. பஞ்சமும் நோயும்நின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமையில் லாயோ?
ஆரிய! நீயும் நின் அறம்மறந் தாயோ?
வெஞ்செயல் அரக்கரை விட்டிடு வோனே!
வீர சிகாமணி! ஆரியர் கோனே!

## 29. சுதந்திர தேவியின் துதி

1. இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்,
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

2. நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்,
அன்னவர் வாழ்க்கை பாழாம்,
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

3. தேவி! நின் னொளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார்?

4. ஒழிவறு நோயிற் சாவார்,
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையில் நிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்,
கனவினும் இன்பங் காணார்;
அழிவுறு பெருமை நல்கும்
அன்னை! நின் அருள்பெ றாதார்.

வேறு

5. தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்து
ஆவி யும்தம தன்பும் அளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினும்,
தாவில் வானுல கென்னத் தகுவதே.

6. அம்மை உன்றன் அருமை யறிகிலார்;
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்;
இம்மை யின்பங்கள் எய்துபொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே.

7. மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புதுநிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்.

8. அன்ன தன்மைகொள் நின்னை அடியனேன்
என்ன கூறி இசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்தில் தோன்றினேன்.

9. பேர றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர், மிடி யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமு தே! நினை வேண்டுவேன்.

## 30. விடுதலை

இராகம்: பிலகரி.

விடுதலை! விடுதலை! விடுதலை!

1. பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை;
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை;
திறமை கொண்ட தீமையற்ற
தொழில்பு ரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்,
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே;

வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே,
மனிதர் யாரும் ஒருநி கர்ஸ-
மான மாக வாழ்வமே (விடுதலை)

3. மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி னும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
ஸரிநி கர்ஸ மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே. (விடுதலை)

## 31. சுதந்திரப் பள்ளு

### பள்ளர் களியாட்டம்

இராகம்: வராளி. தாளம்: ஆதி.

பல்லவி

ஆடு வோமே—பள்ளுப்
பாடு வோமே;
ஆனந்த சுதந்திரம்
அடைந்துவிட் டோமென்று (ஆடுவோமே)

சரணங்கள்

1. பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யும்
காலமும் போச்சே. (ஆடுவோமே)

2. எங்கும் சுதந்திரம்
என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமமென்பது
உறுதி யாச்சு ;
சங்குகொண்டே வெற்றி
ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல் லாமெடுத்து
ஓது வோமே. (ஆடுவோமே)

3. எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே. (ஆடுவோமே)

4. உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.
விழலுக்கு நீர்பாய்ச்சி
மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓய மாட்டோம். (ஆடுவோமே)

5. நாமிருக்கும் நாடுநமது
என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும்இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை
செய்து வாழ்வோம். (ஆடுவோமே)

# IV. தேசீய இயக்கப் பாடல்கள்

## 32. சத்ரபதி சிவாஜி

*(தன் சைனியத்திற்குக் கூறியது)*

நிலைமண்டில ஆசிரியப்பா

ஜயஜய பவானி! ஜயஜய பாரதம்!
ஜயஜய மாதா! ஜயஜய துர்க்கா!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!
சேனைத் தலைவர்காள்! சிறந்தமந் திரிகாள்!
யானைத் தலைவரும் அருந்திறல் வீரர்காள்
அதிரத மன்னர்காள்! துரகத் ததிபர்காள்!
எதிரிகள் துணுக்குற இடித்திடு பதாதிகாள்!
வேலெறி படைகாள்! சூலெறி மறவர்காள்!
கால னுருக்கொளும் கணைதுரந் திடுவீர்.
மற்றுமா யிரவிதம் பற்றலர் தம்மைச்
செற்றிடுந் திறனுடைத் தீரத் தினங்காள்!
யாவிரும் வாழிய! யாவிரும் வாழிய!
தேவிநுந் தமக்கெலாம் திருவருள் புரிக!
மாற்றலர் தம்புலை நாற்றமே யறியா
ஆற்றல்கொண் டிருந்ததிவ் வரும்புகழ் நர்டு!
வேதநூல் பழிக்கும் வெளித்திசை மிலேச்சர்
பாதமும் பொறுப்பளோ பாரத தேவி?
வீரரும் அவரிசை விரித்திடு புலவரும்
பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு!
தர்மமே உருவமாத் தழைத்தபே ரரசரும்
நிர்மல முனிவரும் நிறைந்தநன் னாடு!
வீரரைப் பெறாத மேன்மைதீர் மங்கையை
ஊரவர் மலடியென் றுரைத்திடு நாடு!
பாரத பூமி பழம்பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!

வானக முட்டும் இமயமால் வரையும்
ஏனைய திசைகளில் இருந்திரைக் கடலும்
காத்திடு நாடு! கங்கையும் சிந்துவும்
தூத்திரை யமுனையும் சுனைகளும் புனல்களும்
இன்னறும் பொழில்களும் இணையிலா வளங்களும்
உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு!
பைந்நிறப் பழனம் பசியிலா தளிக்க
மைந்நிற முகில்கள் வழங்குபொன் னாடு!
தேவர்கள் வாழ்விடம் திறலுயர் முனிவர்
ஆவலோ டடையும் அரும்புகழ் நாடு!
ஊனமொன் றறியா ஞானமெய்ப் பூமி
வானவர் விழையும் மாட்சியார் தேயம்!
பாரத நாட்டிசை பகரயான் வல்லனோ?
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்!
தாய்த்திரு நாட்டைத் தறுகண் மிலேச்சர்.
பேய்த்தகை கொண்டோர், பெருமையும் வண்மையும்
ஞானமும் அறியா நவைபுரி பகைவர்,
வானகம் அடக்க வந்திடும் அரக்கர் போல்
இந்நாள் படைகொணர்ந்து இன்னல் செய்கின்றார்!
ஆலயம் அழித்தலும் அருமறை பழித்தலும்
பாலரை விருத்தரைப் பசுக்களை ஒழித்தலும்
மாதர்கற் பழித்தலும் மறையவர் வேள்விக்கு
ஏதமே சூழ்வதும் இயற்றிநிற் கின்றார்!
சாத்திரத் தொகுதியைத் தாழ்த்துவைக் கின்றார்!
கோத்திர மங்கையர் குலங்கெடுக் கின்றார்!
எண்ணில துணைவர்காள்! எமக்கிவர் செயுந்துயர்;
கண்ணியம் மறுத்தனர்; ஆண்மையுங் கடிந்தனர்;
பொருளினைச் சிதைத்தனர்; மருளினை விதைத்தனர்;
திண்மையை யழித்துப் பெண்மையிங் களித்தனர்;
பாரதப் பெரும்பெயர் பழிப்பெய ராக்கினர்;
சூரர்தம் மக்களைத் தொழும்பராய்ப் புரிந்தனர்
வீரியம் அழிந்து மேன்மையும் ஒழிந்துநம்
ஆரியர் புலையருக் கடிமைக ளாயினர்.
மற்றிதைப் பொறுத்து வாழ்வதோ வாழ்க்கை?

வெற்றிகொள் புலையர்தாள் விழ்ந்துகொல் வாழ்வீர்?
மொக்குள் தான் தோன்றி முடிவது போல
மக்களாய்ப் பிறந்தோர் மடிவது திண்ணம்!
தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடு மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வுமோர் வாழ்வுகொல்?
மானமொன் றிலாது மாற்றலர் தொழும்பராய்
ஈனமுற் றிருக்க எவன்கொலோ விரும்புவன்?
தாய்பிறன் கைப்படச் சகிப்ப வனாகி
நாயென வாழ்வோன் நமரிலிங் குளனோ?
பிச்சைவாழ் வுகந்து பிறருடை யாட்சியில்
அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன்.
புன்புலால் யாக்கையைப் போற்றியே தாய்நாட்டு
அன்பிலா திருப்போன் ஆரிய னல்லன்.
மாட்சிதீர் மிலேச்சர் மனப்படி யாளும்
ஆட்சியி லடங்குவோன் ஆரிய னல்லன்.
ஆரியத் தன்மை அற்றிடுஞ் சிறியர்
யாரிவ ணுளரவர் யாண்டேனும் ஒழிக!
படைமுகத்து இறந்து பதம்பெற விரும்பாக்
கடைபடு மாக்களென் கண்முனில் லாதீர்!
சோதரர் தம்மைத் துரோகிகள் அழிப்ப
மாத்ரார் நலத்தின் மகிழ்பவன் மகிழ்க!
நாடெலாம் பிறர்வசம் நண்ணுதல் நினையான்
வீடுசென் றொளிக்க விரும்புவோன் விரும்புக!
தேசமே நலிவொடு தேய்ந்திட மக்களின்
பாசமே பெரிதெனப் பார்ப்பவன் செல்க!
நாட்டுளார் பசியினால் நலிந்திடத் தன்வயிறு
ஊட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க!
ஆணுருக் கொண்ட பெண்களும் அலிகளும்
வீணிலிங் கிருந்தெனை வெறுத்திடல் விரும்பேன்
ஆரியர் இருமின்! ஆண்களிங் கிருமின்!
வீரியம் மிகுந்த மேன்மையோர் இருமின்!
மானமே பெரிதென மதிப்பவர் இருமின்!
ஈனமே பொருத இயல்பினர் இருமின்!
தாய்நாட் டன்புறு தனயரிங் கிருமின்!

மாய்நாட் பெருமையின் மாய்பவர் இருமின்!
புலையர்தம் தொழும்பைப் பொறுக்கிலார் இருமின்!
கலையறு மிலேச்சரைக் கடிபவர் இருமின்!
ஊரவர் துயரில்நெஞ் சுருகுவீர் இருமின்!
சோர நெஞ்சிலாத் தூயவர் இருமின்!
தேவி தாள்பணியுந் தீரரிங் கிருமின்!
பாவியர் குருதியைப் பருகுவார் இருமின்!
உடலினைப் போற்றா உத்தமர் இருமின்!
கடல்மடுப் பினும்மனம் கலங்கலர் உதவுமின்!
வம்மினோ துணைவீர்! மருட்சிகொள் ளாதீர்!
நம்மனோ ராற்றலை நாழிகைப் பொழுதெனும்
புல்லிய மாற்றலர் பொறுக்கவல் லார்கொல்?
மெல்லிய திருவடி விறுடைத் தேவியின்
இன்னருள் நமக்கோர் இருந்துணை யாகும்.
பன்னரும் புகழுடைப் பார்த்தனும் கண்ணனும்
விமனும் துரோணனும் வீட்டுமன் றானும்
ராமனும் வேறுள இருந்திறல் வீரரும்
நற்றுணை புரிவர்; வானக நாடுறும்;
வெற்றியே யன்றி வேறெதும் பெறுகிலேம்.
பற்றறு முனிவரும் ஆசிகள் பகர்வர்;
செற்றினி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்!
ஈட்டியாற் சிரங்களை வீட்டிட எழுமின்!
நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்!
வாளுடை முனையினும், வயந்திகழ் சூழினும்,
ஆளுடைக் கால்க ளடியினுந் தேர்களின்
உருளையி னிடையினும், மாற்றலர் தலைகள்
உருளையிற் கண்டுநெஞ் சுவப்புற வம்மின்!
நம்இதம், பெருவளம் நலிந்திட விரும்பும்
(வன்மியை) வேறரத் தொலைத்தபின் னன்றோ
ஆணெனப் பெறுவோம்! அன்றிநாம் இறப்பினும்
வானுறு தேவர் மணியுல கடைவோம்!
வாழ்வமேற் பாரத வான்புகழ்த் தேவியைத்
தாழ்வினின் றுயர்த்திய தடம்புகழ் பெறுவோம்!
போரெனி லிதுபோர்! புண்ணியத் திருப்போர்

பாரினி லிதுபோற் பார்த்திடற் கெளிதோ?
ஆட்டினைக் கொன்று வேள்விகள் இயற்றி
வீட்டினைப் பெறுவான் விரும்புவார் சிலரே;
நெஞ்சக் குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகம் அழிக்கும் மாமகம் புரிவம்யாம்.
வேள்வியில் இதுபோல் வேள்வியொன் றில்லை;
தவத்தினில் இதுபோல் தவம்பிறி தில்லை.
முன்னையோர் பார்த்தன் முனைத்திசை நின்று
தன்னெதிர் நின்ற தளத்தினை நோக்கிட,
மாதுலர் சோதரர் மைத்துனர் தாதையர்
காதலின் நண்பர் கலைதரு குரவரென்று
இன்னவ ரிருத்தல்கண்டு இதயம்நொந் தோனாய்த்
தன்னருந் தெய்விகச் சாரதி முன்னர்
"ஐயனே! இவர்மீ தம்பையோ தொடுப்பேன்?
வையகத் தரசும் வானக ஆட்சியும்
போயினும் இவர்தமைப் போரினில் வீழ்த்தேன்.
மெய்யினில் நடுக்கம் மேவுகின் றதுவால்;
கையினில் வில்லும் கழன்று வீழ்கின்றது;
வாயுலர் கின்றது; மனம்பதைக் கின்றது;
ஓய்வுறுங் கால்கள்; உலைந்தது சிரமும்;
வெற்றியை விரும்பேன், மேன்மையை விரும்பேன்;
சுற்றமிங் கறுத்துச் சுகம்பெறல் விரும்பேன்;
எனையிவர் கொல்லினும் இவரையான் தீண்டேன்;
சினையறுத் திட்டபின் செய்வதோ ஆட்சி?"
எனப்பல கூறியவ் விந்திரன் புதல்வன்
கனப்படை வில்லைக் களத்தினில் எறிந்து
சோர்வொடு வீழ்ந்தனன்; சுருதியின் முடிவாய்த்
தேர்வயின் நின்றநம் தெய்விகப் பெருமான்
வில்லெறிந் திருந்த வீரனை நோக்கி,
"புல்லிய அறிவொடு புலம்புகின் றனையால்;
அறத்தினைப் பிரிந்த சுயோதன னியரைச்
செறுத்தினி மாய்ப்பது தீமையென் கின்றாய்;
உண்மையை அறியாய்; உறவையே கருதிப்
பெண்மைகொண் டேதோ பிதற்றிநிற் கின்றாய்;

வஞ்சகர், தீயர், மனிதரை வருத்துவோர்,
நெஞ்சகத் தருக்குடை நீசர்கள்; இன்னோர்
தம்மொடு பிறந்த சகோதர ராயினும்,
வெம்மையோ டொறுத்தல் வீரர்தஞ் செயலாம்.
ஆரிய நீதிநீ அறிகிலை போலும்;
பூரியர் போல்மனம் புழுங்குற லாயினை.
அரும்புகழ் தேய்ப்பதும் அனாரியத் தகைத்தும்
பெரும்பதத் தடையுமாம் பெண்மையெங் கெய்தினை?
பேடிமை யகற்று! நின் பெருமையை மறந்திடேல்
ஈடிலாப் புகழினாய்! எழுகவோ எழுக!"
என்றுமெய்ஞ் ஞானம்நம் இறையவர் கூறக்
'குன்றெனும் வயிரக் கொற்றவான் புயத்தோன்
அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய்
மறமே உருவுடை மாற்றலர் தம்மைச்
சுற்றமும் நோக்கான் தோழமை மதியான்
பற்றலர் தமையெலாம் பார்க்கிரை யாக்கினன்.
விசயனன் றிருந்த வியன்புகழ் நாட்டில்
இசையுநற் றவத்தால் இன்றுவாழ்ந் திருக்கும்
ஆரிய வீரர்காள்; அவருடை மாற்றலர்,
தேரில், இந் நாட்டினர், செறிவுடை உறவினர்;
நம்மையின் றெதிர்க்கும் நயனிலாப் புல்லோர்
செம்மைதீர் மிலேச்சர், தேசமும் பிறிதாம்
பிறப்பினில் அன்னியர், பேச்சினில் அன்னியர்,
சிறப்புடை யாரியச் சீர்மையை அறியார்.

* * *

## 33. கோக்கலே சாமியார் பாடல்

(இராமலிங்க சுவாமிகள் "களக்கமறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம்" என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது,)

களக்கமுறும் மார்லிநடம்
கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக்
காய்த்ததொரு காய்தான்.

விளக்குமுறப் பழுத்திடுமோ?
வெம்பிவிழுந் திடுமோ?
வெம்பாது விழினுமென்றன்
கரத்திலகப் படுமோ?
வளர்த்தபழம் கர்சானென்ற
குரங்குகவர்ந் திடுமோ?
மற்றிங்ஙன் ஆட்சிசெயும்
அணில்கடித்து விடுமோ?
துளக்கமற யான்பெற்றிங்
குண்ணுவனோ, அல்லால்
தொண்டைவிக்கு மோஏதும்
சொல்லரிய தாமோ?

## 34. தொண்டு செய்யும் அடிமை

### ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாசிக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது

*(நந்தனார் சரித்திரத்திலுள்ள "மாடு தின்னும் புலையா!—உனக்கு மார்கழித் திருநாளா?" என்ற பாட்டின் வர்ணமெட்டு.)*

1. தொண்டு செய்யும் அடிமை!—உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ?—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

2. ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச்சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்!—கண்முன்
நிற்கொணாது போடா! (தொண்டு)

3. அச்சம் நீங்கினாயோ?—அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

4. கப்ப லேறு வாயோ ?—அடிமை !
கடலைத் தாண்டுவாயோ ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை !
கொற்றத் தவிசுமுண்டோ ? (தொண்டு)

5. ஒற்று மையயின் றியோ ?—அடிமை !
உடம்பில் வலிமையுண்டோ ?
வெற்று ரைபே சாதே ?—அடிமை !
வீரியம் அறிவாயோ ? (தொண்டு)

6. சேர்ந்து வாழு வீரோ ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ ?
சோர்ந்து வீழ்தல் போச்சோ ?—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ ? (தொண்டு)

7. வெள்ளை நிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலை ஒழித்தாயோ ?
உள்ள துசொல் வேன்கேள்—சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா ! (தொண்டு)

8. நாடு காப்ப தற்கே—உனக்கு
ஞானம் சிறிதுமுண்டோ ?
வீடு காக்கப் போடா !—அடிமை !
வேலை செய்யப்போடா ! (தொண்டு)

9. சேனை நடத்து வாயோ ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ ?
ஈன மான தொழிலே—உங்களுக்கு
இசைவ தாகும்போடா ! (தொண்டு)

## 35. நம்ம ஜாதிக்கடுக்குமோ ?

### புதிய கட்சித்தலைவரை நோக்கி நிதானக்கட்சியார் சொல்லுதல்

*(" ஓய் நந்தனாரே ! நம்ம ஜாதிக் கடுக்குமோ ?
நியாயந்தானோ ? நீர் சொல்லும் ?" என்ற வர்ணமெட்டு.)*

பல்லவி

ஓய் திலகரே ! நம்ம ஜாதிக் கடுக்குமோ ?
செய்வது சரியோ ? சொல்லும் ?

கண்ணிகள்

1. முன்னறி யாப்புது வழக்கம்—நீர்
மூட்டிவிட்ட திந்தப் பழக்கம்—இப்போது
எந்நக ரிலுமிது முழக்கம்—மிக
இடும்பைசெய்யும் இந்த ஒழுக்கம். (ஓய் திலகரே)

2. சுதந்திரம் என்கிற பேச்சு—எங்கள்
தொழும்புக ளெல்லாம்விணுய்ப் போச்சு—இது
மதம்பி டித்ததுபோ லாச்சு—எங்கள்
மனிதர்க் கெல்லாம் வந்ததேச்சு. (ஓய் திலகரே)

3. வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம்—அன்றி
வேறெவ ருக்குமது தியாஜ்யம்—சிறு
பிள்ளை களுக்கே உபதேசம்—நீர்
பேசி வைத்ததெல்லாம் மோசம். (ஓய் திலகரே)

## 36. நாம் என்ன செய்வோம்!

*("நாம் என்ன செய்வோம்! புலையரே!—இந்தப்
பூமியி லில்லாத புதுமையைக் கண்டோம்" என்ற வர்ணமெட்டு.)*

இராகம்: புன்னுகவராளி. தாளம்: ரூபகம்.

பல்லவி

நாம் என்ன செய்வோம்! துணைவரே!—இந்தப்
பூமியி லில்லாத புதுமையைக் கண்டோம். (நாம்)

சரணங்கள்

1. திலகன் ஒருவனுலே இப்படி யாச்சு
செம்மையும் தீமையும் இல்லாமலே போச்சு;
பலதிசையும் துஷ்டர் கூட்டங்க ளாச்சு
பையல்கள் நெஞ்சில்பய மென்பதே போச்சு. (நாம்)

2. தேசத்தில் எண்ணற்ற பேர்களுங் கெட்டார்
செய்யுந் தொழில்முறை யாவையும் விட்டார்;
பேசுவோர் வார்த்தை தாதா சொல்லிவிட்டார்
பின்வர வறியாமல் சுதந்திரம் தொட்டார். (நாம்)

3. பட்டம்பெற் ரோர்க்குமதிப் பென்பது மில்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ ரில்லை;
சட்டம் மறந்தோர்க்குப் பூஜை குறைவில்லை
சர்க்கா ரிடம்சொல்லிப் பார்த்தும் பயனில்லை. (நாம்)

4. சீமைத் துணியென்றால் உள்ளங் கொதிக்கிறார்
சீரில்லை என்றாலோ எட்டி மிதிக்கிறார்;
தாமெத் தையோ 'வந்தே' யென்று துதிக்கிறார்
தரமற்ற வார்த்தைகள் பேசிக் குதிக்கிறார். (நாம்)

## 37. பாரத தேவியின் அடிமை

(நந்தன் சரித்திரத்திலுள்ள "ஆண்டைக் கடிமைக் காரனல்லவே" என்ற பாட்டின் வர்ணமெட்டையும், கருத்தையும் பின்பற்றி எழுதப்பட்டது.)

பல்லவி

அன்னியர் தமக்கடிமை யல்லவே—நான்
அன்னியர் தமக்கடிமை யல்லவே.

சரணங்கள்

1. மன்னி யபுகழ்ப் பாரததேவி
தன்னிரு தாளிணைக் கடிமைக் காரன். (அன்)

2. இலகு பெருங்குணம் யாவைக்கும் எல்லையாம்
திலக முனிக்கொத்த அடிமைக் காரன். (அன்)

3. வெய்ய சிறைக்குள்ளே புன்னகை யோடுபோம்
ஐயன் பூபேந்த்ரனுக் கடிமைக் காரன். (அன்)

4. காலர் முன்னிற்பினும் மெய்தவறா எங்கள்
பாலர் தமக்கொத்த அடிமைக் காரன். (அன்)

5. காந்தன லிட்டாலும் தர்மம் விடாப்ரம்ம
பாந்தவன் தாளிணைக் கடிமைக் காரன். (அன்)

## 38. வெள்ளைக்கார விஞ்ச் துரை கூற்று

இராகம்: *தண்டகம்.* தாளம்: *ஆதி.*

1. *நாட்டி லெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை*
*நாட்டி னாய்;—கனல்—மூட்டினாய்;*
*வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே*
*மாட்டு வேன்;—வலி—காட்டுவேன்.* (*நாட்டி*)

2. *கூட்டங் கூடி வந்தே மாதர மென்று*
*கோஷித் தாய்;—எமைத்—தூஷித்தாய்;*
*ஓட்டம் நாங்க ளெடுக்க வென்றே கப்பல்*
*ஓட்டி னாய்;—பொருள்—ஈட்டினாய்.* (*நாட்டி*)

3. *கோழைப் பட்ட ஜனங்களுக் குண்மைகள்*
*கூறி னாய்;—சட்டம்—மீறினாய்;*
*ஏழைப்பட் டிங்கு இறத்தல் இழிவென்றே*
*ஏசி னாய்;—வீரம்—பேசினாய்.* (*நாட்டி*)

4. *அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்*
*ஆக்கி னாய்;—புன்மை—போக்கினாய்;*
*மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை*
*மீட்டி னாய்;—ஆசை—ஊட்டினாய்.* (*நாட்டி*)

5. *தொண்டொன் றேதொழி லாக்கொண் டிருந்தோரைத்*
*தூண்டி னாய்;—புகழ்—வேண்டினாய்;*
*கண்ட கண்டதொழில் கற்க மார்க்கங்கள்*
*காட்டி னாய்;—சோர்வை—ஓட்டினாய்.* (*நாட்டி*)

6. *எங்கும் இந்த ஸ்வராஜ்ய விருப்பத்தை*
*ஏவி னாய்;—விதை—தூவினாய்;*
*சிங்கம் செய்யும் தொழிலைச் சிறுமுயல்*
*செய்ய வோ;—நீங்கள்—உய்யவோ?* (*நாட்டி*)

7. *சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்*
*சொல்லு வேன்;—குத்திக்—கொல்லுவேன்;*
*தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே*
*தள்ளு வேன்;—பழி—கொள்ளுவேன்.* (*நாட்டி*)

## 39. தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை மறுமொழி

1. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சி டோம்;—இனி—அஞ்சிடோம் ;
எந்த நாட்டினும் இந்த அநீதிகள்
ஏற்கு மோ?—தெய்வம்—பார்க்குமோ?

2. வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை
வாழ்த்து வோம்;—முடி—தாழ்த்துவோம் ;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈன மோ?—அவ—மானமோ?

3. பொழுதெல்லாம் எங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ? ஆண்பிள்ளைகள்
அல்ல மோ?—உயிர்—வெல்லமோ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்க ளோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டும் மனிதர்க ளோ? இது
நீத மோ?—பிடி—வாதமோ?

5. பார தத்திடை அன்பு செலுத்துதல்
பாப மோ?—மனஸ்—தாபமோ?
கூறும் எங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்ற மோ?—இதிற்—செற்றமோ?

6. ஒற்று மைவழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட் டோம்;—நன்கு—தேர்ந்திட்டோம் ;
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெலாம்
மலைவு றோம்;—சித்தம்—கலைவுறோம்.

7. சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயு மோ?—ஜீவன்—ஓயுமோ?
இதையத் துள்ளே இலங்கு மஹாபக்தி
ஏகு மோ?—நெஞ்சம்—வேகுமோ?

## 40. நடிப்புச் சுதேசிகள்

### பழித்தறிவுறுத்தல்

### கிளிக் கண்ணிகள்

1. நெஞ்சில் உரமு மின்றி,
நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை செய்வா ரடீ!—கிளியே!
வாய்ச் சொல்லில் வீர ரடீ!

2. கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்திற் கொள்ளா ரடீ!—கிளியே!
நாளில் மறப்பா ரடீ!

3. சொந்த அரசும் புவிச்
சுகங்களும் மாண்பு களும்
அந்தகர்க் குண்டாகு மோ!—கிளியே!
அலிகளுக் கின்ப முண்டோ!

4. கண்கள் இரண்டி ருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்ட மடீ!—கிளியே!
பேசிப் பயனென் னடீ!

5. யந்திர சாலை யென்பர்
எங்கள் துணிக ளென்பர்
மந்திரத் தாலே யெங்கும்—கிளியே!
மாங்கனி வீழ்வ துண்டோ?

6. உப்பென்றும் சீனி என்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவா ரடீ!—கிளியே!
செய்வ தறியா ரடீ!

7. தேவியர் மானம் என்றும்
தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்—கிளியே!
நம்புத லற்றா ரடீ!

8. மாதரைக் கற்பழித்து
வன்கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே!
பேணி யிருந்தா ரடீ!

9. தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே!
அஞ்சிக் கிடந்தா ரடீ!

10. அச்சமும் பேடி மையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டா ரடீ!—கிளியே!
ஊமைச் சனங்க ளடீ!

11. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்று மில்லா
மாக்களுக்கோர் கணமும்!—கிளியே!
வாழத் தகுதி யுண்டோ?

12. மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்!—கிளியே!
இருக்க நிலைமை யுண்டோ!

13. சிந்தையிற் கள் விரும்பிச்
சிவசிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்!—கிளியே!
மனதி லதனைக் கொள்ளார்.

14. பழமை பழமையென்று
பாவனை பேசலன்றிப்
பழமை இருந்த நிலை!—கிளியே!
பாமர ரேதறி வார்!

15. நாட்டில் அவ மதிப்பும்
நாணின்றி இழி செல்வத்
தேட்டில் விருப்புங் கொண்டே!—கிளியே!
சிறுமை யடைவா ரடீ!

16. சொந்தச் சகோ தரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்,
சிந்தை இரங்கா ரடீ !—கிளியே !
செம்மை மறந்தா ரடீ !

17. பஞ்சத்தும் நோய்க ளிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத்தம் கண்ணுற் கண்டும் !—கிளியே !
சோம்பிக் கிடப்பா ரடீ !

18. தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா !—கிளியே !
வந்தே மாதர மென்பார்.

கூடிவந் தெய்தினர், கொழும்பொழி லினங்களும்,
புன்னகை புனைந்த புதுமலர்த் தொகுதியும்,
பைந்நிறம் விரிந்த பழனக் காட்சியும்,
"நல்வர வாகுக நம்மனோர் வரவு" என்று
ஆசிகள் கூறி ஆர்ப்பன போன்ற.
புண்ணிய நாளிற் புகழ்வளர் குரவன்
திருமொழி கேட்கச் செறிந்தனர் சீடர்கள்,
"யாதவன் கூறும்? என்னெமக் கருளும்?
எப்பணி விதித்தெம தேழேழ் பிறவியும்
இன்புடைத் தாக்கும்?" எனப்பல கருதி
மாலோன் திருமுனர் வந்துகண் ணுயர்த்தே
ஆக்கினை தெரிவான் ஆவலொடு துடிக்கும்
தேவரை யொத்தனர். திடுக்கெனப் பீடத்து
ஏறி நின்றதுகாண்! இளமையும் திறலும்
ஆதிபத் தகைமையும் அமைந்ததோர் உருவம்.
விழிகளில் தெய்வப் பெருங்கனல் வீசிட
திருமுடி சூழ்ந்ததோர் தேசுகாத் திருப்ப
தூக்கிய கரத்தில் சுடருமிழ்ந் திருந்தது
கூறநா நடுங்குமோர் கொற்றக் கூர்வாள்,
எண்ணிலா வீரர் இவ்வுரு நோக்கி,
வானின் றிறங்கிய மாந்திரி கன்முனர்ச்
சிங்கக் கூட்டம் திகைத்திருந் தாங்கு
மோனமுற் றடங்கி முடிவணங் கினரால்.
வாள்நுனி காட்டி மாட்சியார் குரவன்
திருவுள நோக்கஞ் செப்புவன்; தெய்வச்
சேயித ழசைவுறச் சினந்ததோர் எரிமலை
குமுறுதல் போல்வெளிக் கொண்டன திருமொழி:
"வாளிதை மனிதர் மார்பிடைக் குளிப்ப
விரும்புகின் றேன்யான்; தீர்கிலா விடாய்கொள்
தருமத் தெய்வந் தான்பல குருதிப்
பலிவிழை கின்றதால்: பக்தர்காள்! நும்மிடை
நெஞ்சினைக் கிழித்து நிலமிசை யுதிரம்
வீழ்த்தித் தேவியின் விடாயினைத் தவிர்ப்ப
யார்வரு கின்றீர்!" என்னலும் சீடர்கள்

நடுங்கியோர் கணம்வரை நாவெழா திருந்தனர்.
கம்மென ஓர்சிறு கணங்கழி வுற்றது.
ஆங்கிருந் தார்பல் லாயிர ருள்ளொரு
வீரன்முன் வந்து விளம்புவன் இஃதே:
"குருமணி, நின்னொரு கொற்றவாள் கிழிப்ப
விடாயுறுத் தருமம் மேம்படு தெய்வதத்து
இரையென மாய்வன் ஏற்றருள் புரிகவே."
புன்னகை மலர்ந்தது புனிதநல் வதனம்
கோயிலு ளவனைக் குரவர்கோன் கொடுசெல,
மற்றத னின்றோர் மடுவின்வந் தாலெனக்
குருதி நீர்பாயக் குழாத்தினர் கண்டனர்.
பார்மின்! சற்குரு பளீரெனக் கோயிலின்
வெளிப்போந் தாங்கு மேவினோர் முன்னம்
முதற்பலி முடித்து முகமலர்ந் தோனாய்
மின்னெனப் பாய்ந்து மீண்டுவந் துற்றனன்.
மீண்டுமவ் வுதிரவாள் விண்வழி தூக்கிப்
பின்வரு மொழிகள் பேசுவன் குரவர்கோன்:
"மானுடர் நெஞ்சிலிவ் வாளினைப் பதிக்கச்
சித்தநான் கொண்டேன் தேவிதான் பின்னுமோர்
பலிகேட் கின்றாள் பக்தர்காள்! நும்முளே
இன்னுமிங் கொருவன் இரத்தமே தந்திக்
காளியைத் தாகங் கழித்திடத் துணிவோன்
எவனுளன்?" எனலும் இன்னுமோர் துணிவுடை
வீரன்முன் னின்று விருப்பினை உணர்த்தினன்.
இவனையுங் கோயிலுள் இனிதழைத் தேகி
இரண்டாம் பலிமுடித் தீண்டினன் குரவன்;
குருதியைக் கண்டு குழாத்தினர் நடுங்கினர்.
இங்ஙன மீண்டுமே யியற்றிப்
பலியோ ரைந்து பரமனங் களித்தனன்.

* * *

அறத்தினைத் தமதோ ரறிவினாற் கொண்ட
மட்டிலே மானிடர் மாண்பெற லாகார்.
அறமது தழைப்ப நெஞ்சகம் காட்டி
வாட்குத் தேற்று மாய்பவர் பெரியோர்

அவரே மெய்ம்மையோர்; முத்தரும் அவரே.
தோன்று நூறாயிரம் தொண்டர் தம்முளே
அத்தகை நல்லரை யறிகுதல் வேண்டியே
தண்ணருட் கடலாந் தகவுயர் குரவன்
கொடுமைசேர் சோதனை புரிந்திடல் குறித்தனன்;
அன்பின் மிகையால் ஆருயிர் நல்குவோர்
ஐவரைக் கண்டபின் அவ்விய லுடையார்
எண்ணில ருளரெனத் துணிந்தின் பெய்தினன்.
வெய்யசெங் குருதியின் வீழ்ந்துதா மிறந்து
சொர்க்கமுற் றாரெனத் தொண்டர்கொண் டிருக்கும்
ஐந்துநன் மணியெனும் ஐந்துமுத் தரையும்
கோயிலு ளிருந்துபே ரவைமுனர்க் கொணர்ந்தான்!
ஆர்த்தனர் தொண்டர்! அருவியப் பெய்தினர்
விழிகளைத் துளைத்து மீளவும் நோக்கினர்!
ஜயஜய குருமணி ஜயகுரு சிங்கம்
எனப்பல வாழிக ளிசைத்தனர்; ஆடினர்
அப்போழ் தின்னருள் அவதரித் தனையான்,
நற்சுடர்ப் பரிதி நகைபுரிந் தாங்கு
குறுநகை புரிந்து குறையறு முத்தர்
ஐவர்கள் தம்மையும் அகமுறத் தழுவி
ஆசிகள் கூறி அவையினை நோக்கிக்
கடல்முழக் கென்ன முழங்குவன் காணீர்:
"காளியும் நமது கனக நன்னாட்டுத்
தேவியும் ஒன்றெனத் தேர்ந்தநல் லன்பர்காள்!
நடுக்க நீரெய்த நானைம் முறையும்
பலியிடச் சென்றது, பாவனை மன்ற.
என்கரத் தாற்கொலோ நும்முயி ரெடுப்பன்?
ஐம்முறை தானும் அன்பரை மறைத்துநும்
நெஞ்சகச் சோதனை நிகழ்த்தினன் யானே.
தாய்மணி நாட்டின் உண்மைத் தனயர்நீர்
என்பது தெளிந்தேன்; என்கர வாளால்
அறுத்ததிங் கின்றைந் தாடுகள் காண்பீர்;
சோதனை வழியினு நுணிவினைக் கண்டேன்;
களித்ததென் நெஞ்சம்; கழிந்தன கவலைகள்."

குருகோ விந்தன் கொண்டதோர் தருமம்
'சீடர் தம் மார்க்கம்' எனப்புகழ் சிறந்தது.
இன்றுமம் மார்க்கத் திருப்பவர் தம்பெயர்
'காலசா' என்ப, 'காலசா' எனுமொழி
முத்தர்தம் சங்க முறையெனும் பொருளது.
முத்தர்தம் சபைக்கு மூலர்க ளாகமற்று
ஐவரன் னோர்தமை அருளினன் ஆரியன்.
சமைந்தது 'காலசா' எனும்பெயர்ச் சங்கம்.
பாரத மென்ற பழம்பெரு நாட்டினர்,
ஆவிதேய்ந் தழிந்திலர், ஆண்மையிற் குறைந்திலர்
வீரமுஞ் சிரத்தையும் வீந்தில ரென்று
புவியினோர் அறியப் புரிந்தனன் முனிவன்.
அந்நாள் முகுந்தன் அவதரித் தாங்கு, ஓர்
தெய்விகத் தலைவன் சீருறத் தோன்றி
மண்மா சகன்ற வான்படு சொற்களால்
எழுப்பிடுங் காலை, இறந்துதான் கிடக்கிலள்;
இளமையும் துணிவும் இசைந்துநம் அன்னை,
சாதியின் மானந் தாங்கமுற் படுவளென்று
உலகினோ ரறிவிடை யுறுத்தினன் முனிவன்.
ஐம்பெரும் பூதத் தகிலமே சமைத்த
முன்னவ னொப்ப முனிவனும் ஐந்து
சீடர்கள் மூலமாத் தேசுறு பாரதச்
சாதியை வகுத்தனன்; தழைத்தது தருமம்.
கொடுங்கோல் பற்றிய புன்மைக் குரிசிலர்
நடுங்குவ ராயினர்; நகைத்தனள் சுதந்திரை.
ஆயிரத் தெழுநூற் றைம்பத் தாறு
விக்கிர மார்க்க னாண்டினில், வியன்புகழ்க்
குருகோ விந்தன் கொற்றமார் சீடரை,
கூட்டியே தெய்வக் கொலுவொன் றமைத்தனன்.
காண்டற் கரிய காட்சி! கவின்திகழ்
அரியா தனத்தில் அமர்ந்தனன் முனிவர்கோன்,
சூழ்ந்திருந் தனர், உயிர்த் தொண்டர்தாம் ஐவரும்
தன்திருக் கரத்தால் ஆடைகள் சார்த்தி
மாலைகள் சூட்டி மதிப்புற இருத்திக்

கண்மணி போன்றா ரைவர்மேற் கனிந்து
குழைவுற வாழ்த்திக் குழாத்தினை நோக்கி,
“ காண்டிரோ! முதலாங் ‘காலசா’ ” என்றனன்;
நாடும், தருமமும் நன்கினிற் காப்பான்
அமைந்ததிச் சங்கம் அறிமின்நீர் என்றான்.
அருகினி லோடிய ஆற்றினின் றையன்
இருப்புச் சிறுகலத் தின்னீர் கொணர்ந்து
வாள்முனை கொண்டு மற்றதைக் கலக்கி
மந்திர மோதினன்; மனத்தினை யடக்கிச்
சித்தமே முழுதுஞ் சிவத்திடை யாக்கிச்
சபமுரைத் திட்டான்; சயப்பெருந் திரு, அக்
கொலுமுனர் வந்து குதித்துநின் றிட்டாள்;
ஆற்றுநீர் தனையோ அடித்ததத் திருவாள்
அயர்ந்து போய்நின்ற அரும்புகழ் பாரதச்
சாதியின் திறல்கள் தம்மையே இயக்கி
நல்லுயிர் நல்கினன். நாடெலாம் இயங்கின.
தவமுடை ஐவரைத் தன்முனர் நிறுத்தி
மந்திர நீரை மாசறத் தெளித்து
அருள்மய மாகி அவர்விழி தீண்டினன்;
பார்மினோ உலகீர்! பரமனங் கரத்தால்
அவர்விழி தீண்டிய அக்கணத் தன்றே
நாடனைத் திற்கும் நல்வழி திறந்தது!
சீடர்க ளனைவருந் தீட்சையிஃ தடைந்தனர்.
ஐயன் சொல்வன், “அன்பர்காள்! நீவிர்
செய்திடப் பெற்ற தீட்சையின் நாமம்
‘அமிர்தம்’ என்றறிமின்; ‘அரும்பே றாம்இது
பெற்றார் யாவரும் பேரருள் பெற்றார்;
நுமக்கினித் தருமம் நுவன்றிடக் கேண்மின்:
ஒன்றாம் கடவுள், உலகிடைத் தோன்றிய
மானிட ரெல்லாஞ் சோதரர்; மானிடர்
சமத்துவ முடையார்; சுதந்திரஞ் சார்ந்தவர்.
சீடர்காள்! குலத்தினும் செயலினும் அனைத்தினும்
இக்கணந் தொட்டுநீர் யாவிரும் ஒன்றே,
பிரிவுகள் துடைப்பீர்! பிரிதலே சாதல்,

ஆரியர் சாதியுள் ஆயிரஞ் சாதி
வகுப்பவர் வகுத்து மாய்க, நீர் அனைவிரும்
தருமம், கடவுள், சத்தியம், சுதந்திரம்
என்பவை போற்ற எழுந்திடும் வீரச்
சாதியொன் றனையே சார்ந்தோ ராவீர்.
அநீதியும், கொடுமையும் அழித்திடுஞ் சாதி;
மழித்திட லறியா வன்முகச் சாதி;
இரும்புமுத் திரையும் இறுகிய கச்சையும்
கையினில் வாளுங் கழன்றிடாச் சாதி;
சோதர நட்புத் தொடர்ந்திடு சாதி;
அரச னில்லாது தெய்வமே யரசா
மானிடர் துணைவரா, மறமே பகையாக்
குடியர சியற்றுங் கொள்கையார் சாதி;
அறத்தினை வெறுக்கிலீர்! மறத்தினைப் பொறுக்கிலீர்!
தாய்த்திரு நாட்டைச் சந்ததம் போற்றிப்
புகழொடு வாழ்மின்! புகழொடு வாழ்மின்!"
என்றுரைத் தையன் இன்புற வாழ்த்தினன்;
அவனடி போற்றி ஆர்த்தனர் சீடர்கள்.
குருகோ விந்தக் கோமகன் நாட்டிய
கொடியுயர்ந் தசையக் குவலயம் புகழ்ந்தது;
ஆடிய மாய்ந்தது அரங்கசீப் ஆட்சி.

## 43. தாதாபாய் நவுரோஜி

1. முன்னாளில் இராமபிரான் கோதமனு
தியபுதல்வர் முறையி னின்று
பன்னாடு முடிவணங்கத் தலைமைநிறுத்
தியவெமது பரத கண்ட
மின்னாள் இங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்த காலை,
அன்னாளைத் துயர்தவிர்ப்பான் முயல்வர்சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்.

2. அவ்வறிஞரனைவோர்க்கும் முதல்வனும்
மைந்தன், தன் அன்னை கண்ணீர்
எவ்வகையி னுந்துடைப்பேன் இன்றேலென்
உயிர்துடைப்பேன் என்னப் போந்து,
யௌவனநாள் முதற்கொடுதான் எண்பதின்மேல்
வயதுற்ற இன்று காறும்
செவ்வியுறத் தனதுடலம் பொருளாவி
யானுழைப்புத் தீர்த லில்லான்.

3. கல்வியைப்போல் அறிவும், அறிவினைப்போலக்
கருணையும், அக்கருணை போலப்
பல்விதலூக் கங்கள்செயுந் திறனுமொரு
நிகரின்றிப் படைத்த வீரன்,
வில்விறலாற் போர்செய்தல் பயனிலதாம்
எனவதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்.

4. மாதா, வாய் விட்டலற அதைச்சிறிதும்,
மதியாதே வாளுள் போக்குந்
தீதாவார் வரினுமவர்க் கினியசொலி
நன்குணர்த்துஞ் செவ்வி யாளன்,
வேதாவா யினுமவனுக் கஞ்சாமே
உண்மைநெறி விரிப்போன் எங்கள்
தாதாவாய் விளங்குறுநல் தாதாபாய்
நவுரோஜி சரணம் வாழ்க!

5. எண்பஃதாண் டிருந்தவவன் இனிப் பல்லாண்டு
இருந்தெம்மை இனிது காக்க!
பண்பல்ல நமக்கிழைப்போர் அறிவுதிருந்
துக! எமது பரத நாட்டுப்
பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி
போற்புதல்வர் பிறந்து வாழ்க!
விண்புல்லு மீன்களெனை அவனன்னூர்
எவ்வயினும் மிகுக மன்னோ.

## 44. பூபேந்திரர் விஜயம்

1. பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் றனக்குப் பின்வந்தோன்
விண்ணவர்த முலகை யாள்ப்ர—
தாபேந்திரன் கோப முறினுமதற்
கஞ்சியறந் தவிர்கி லாதான்
பூபேந்திரப் பெயரோன் பாரதநாட்
டிற்கடிமை பூண்டு வாழ்வோன்.

2. விழ்த்தல்பெறத் தருமமெலாம், மறமனைத்துங்
கிளைத்துவர, மேலோர் தம்மைத்
தாழ்த்ததமர் முன்னோங்க நிலைபுரண்டு
பாதகமே ததும்பி நிற்கும்
பாழ்த்த கலியுகஞ் சென்று மற்றொருகம்
அருகில்வரும் பான்மை தோன்றக்
காழ்த்தமன வீரமுடன் யுகாந்தரத்தின்
நிலையினிது காட்டி நின்றான்.

3. மண்ணாளு மன்னரவன் றனைச்சிறைசெய்
திட்டாலும் மாந்த ரெல்லாம்
கண்ணாகக் கருதியவன் புகழோதி
வாழ்த்திமனங் களிக்கின் றாரால்;
எண்ணாது நற்பொருளைத் தீதென்பார்
சிலருலகி லிருப்ப ரன்றோ?
விண்ணாரும் பரிதியொளி வெறுத்தொருபுள்
இருளினிது விரும்பல் போன்றே!

4. இன்னாத பிறர்க்கெண்ணான் பாரதநாட்
டிற்கிரங்கி இதயம் நைவான்
ஒன்றாரென் றெவருமிலான் உலகனைத்தும்
ஒருயிரென் றுணர்ந்த ஞானி,
அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமையெதும் அறிகி லாதார்,
முன்னாளில் துன்பின்றி இன்பம் வரா
தெனப்பெரியோர் மொழிந்தா ரன்றே?

## 45. வாழ்க திலகன் நாமம்

பல்லவி

வாழ்க திலகன் நாமம்!
வாழ்க! வாழ்கவே!
வீழ்க! கொடுங் கோன்மை!
வீழ்க! வீழ்கவே!

சரணங்கள்

1. நாலுதிசையும் ஸ்வாதந்தர்ய
நாமம் எழுகவே!
நரக மொத்த அடிமை வாழ்வு
நைந்து கழிகவே!
ஏலுமனிதர் அறிவை யடர்க்கும்!
இருள் அழிகவே!
எந்த நாளும் உலக மீதில்
அச்சம் ஒழிகவே. (வாழ்க)

2. கல்வி யென்னும் வலிமைகொண்ட
கோட்டை கட்டினான்—நல்ல
கருத்தினா லதனைச் சூழ்ந்தோர்
அகழி வெட்டினான்
சொல்விளக்க மென்றதனிடைக்
கோயி லாக்கினான்
ஸ்வாதந் தர்ய மென்றதன்மேற்
கொடியைத் தூக்கினான். (வாழ்க)

3. துன்பமென்னும் கடலைக் கடக்குந்
தோணி யவன்பெயர்
சோர்வென்னும் பேயை யோட்டுஞ்
சூழ்ச்சி யவன்பெயர்
அன்பெனுந்தேன் ஊறித் ததும்பும்
புதுமலர் அவன்பேர்
ஆண்மையென்னும் பொருளைக் காட்டும்
அறிகுறி யவன்பேர். (வாழ்க)

## 46. திலகர் முனிவர்கோன்

1. நாம கட்குப் பெருந்தொண் டியற்றிப்பல்
நாட்டி னோர்தம் கலையிலும் அவ்வவர்
தாம கத்து வியப்பப் பயின்றொரு
சாத்தி ரக்கட லென்ன விளங்குவோன்;
மாம கட்குப் பிறப்பிட மாகமுன்
வாழ்ந்திந் நாளில் வறண்டயர் பாரதப்
பூம கட்கு மனந்துடித் தேயிவள்
புன்மை போக்குவல் என்ற விரதமே.

2. நெஞ்ச கத்தோர் கணத்திலும் நீங்கிலான்
நீத மேயோர் உருவெனத் தோன்றினோன்;
வஞ்ச கத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்கு மாறு மனதிற் கொதிக்கின்றோன்;
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டி ழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செ ழுத்தினைச் சைவர் மொழிதல்போல்
அன்பொ டோதும் பெயருடை யாரியன்.

3. வீர மிக்க மராட்டியர் ஆதரம்
மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆர வைத்த திலக மெனத்திகழ்
ஐயன் நல்லிசைப் பாலகங் காதரன்,
சேர லர்க்கு நினைக்கவுந் தீயென
நின்ற எங்கள் திலக முனிவர்கோன்
சீர டிக்கம லத்தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே.

## 47. லாஜபதி

1. விண்ணகத்தே இரவிதனை வைத்தாலும்
அதன்கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே ஒளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு

மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்
யாங்களெலாம் மறக்கொ ணுதெம்
எண்ணகத்தே. லாஜபதி! இடையின்றி
நீ வளர்தற் கென்செய் வாரே?

2. ஒருமனிதன் றனைப்பற்றிப் பலநாடு
கடத்தியவற் கூறு செய்தல்
அருமையிலை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும், அந்த மேலோன்
பெருமையைநன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பெட்பிற் பேணி
வருமனிதர் எண்ணற்ருர் இவரையெலாம்
ஓட்டியெவர் வாழ்வ திங்கே?

3. பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்ருர்?
ஆரன்பு நாரணன்பால் இரணியன்சேய்
செய்ததினுல் அவனுக் குற்ற
கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டிற்பக்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பலவடைதல் வியத்தற் கொன்ருே?

## 48. லாஜபதியின் பிரலாபம்

கண்ணிகள்

1. நாடிழந்து மக்களையும் நல்லாளை யும்பிரிந்து
வீடிழந்திங் குற்றேன் விதியினையென் சொல்கேனே?

2. வேதமுனி போன்ருர் விருத்தரா மெந்தையிரு
பாதமலர் கண்டு பரவப் பெறுவேனே?

3. ஆசைக் குமரன் அருச்சுனனைப் போல்வான்றன்
மாசற்ற சோதி வதனமினிக் காண்பேனே?

4. அன்றிலைப்போன் றென்னை அரைக்கணமே னும்பிரிந்தால்,
குன்றிமனஞ் சோர்வாளிக் கோலம் பொறுப்பாளோ!

5. வீடும் உறவும் வெறுத்தாலும் என்னருமை
நாடு பிரிந்த நலிவினுக்கென் செய்கேனே?

6. ஆதிமறை தோன்றியநல் லாரியநா டெந்நாளும்
நீதிமறை வின்றி நிலைத்த திருநாடு.

7. சிந்துவெனுந் தெய்வத் திருநதியும் மற்றதிற்சேர்
ஐந்துமணி யாறும் அளிக்கும் புனல்நாடு.

8. ஐம்புலனை வென்றே அறவோர்க்கும் மாற்றலர்தம்
வெம்புலனை வென்றஎண்ணில் வீரருக்குந் தாய்நாடு.

9. நல்லறத்தை நாட்டுதற்கு நம்பெருமான் கௌரவராம்
புல்லரைச் செற்றழித்த புனிதப் பெருநாடு.

10. கன்னனுந் திண்டோட் களவீரன் பார்த்தனொரு
வின்னனொலிகேட்ட மேன்மைத் திருநாடு.

11. கன்ன னிருந்த கருணை நிலம், தர்மனெனும்
மன்னன் அறங்கள் வளர்த்த புகழ்நாடு.

12. ஆரியர்தம் தர்மநிலை ஆதரிப்பான் வீட்டுமனார்
நாரியர்தங் காதல் துறந்திருந்த நன்னாடு.

13. வீமன் வளர்ந்த விறல்நாடு, வில்லசுவத்
தாம னிருந்து சமர்புரிந்த வீரநிலம்.

14. சீக்கரெனும் எங்கள்விறற் சிங்கங்கள் வாழ்தருநல்
ஆக்கமுயர் குன்றம் அடர்ந்திருக்கும் பொன்னாடு.

15. ஆரியர் பாழாகா தருமறையின் உண்மைதந்த
சீரியர் மெய்ஞ்ஞான தயாநந்தர் திருநாடு.

16. என்னருமைப் பாஞ்சாலம் என்றேனும் காண்பேனோ?
பன்னரிய துன்பம் படர்ந்திங்கே மாய்வேனோ?

17. ஏதெல்லாம் பாரதத்தே இந்நாள் நடப்பனவோ?
ஏதெல்லாம் யானறியாது என்மனிதர் பட்டனரோ?

18. என்னை நினைந்தும் இரங்குவரோ? அல்லாது
பின்னைத் துயர்களிலென் பேரும்மறந் திட்டாரோ?

19. தொண்டுபட்டு வாடுமென்றன் தூய பெருநாட்டில்
கொண்டுவிட்டங் கென்னையுடன் கொன்றாலும் இன்புறு
[வேன்.

20. எத்தனை ஜன்மங்கள் இருட்சிறையி லிட்டாலும்
தத்துபுனற் பாஞ்சாலந் தனில்வைத்தால் வாடுகிலேன்.

## 49. வ. உ. சி.-க்கு வாழ்த்து

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ,
வருந்தலைஎன் கேண்மைக்கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வாளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி வாழ்தி!

# VI. பிறநாடுகள்

## 50. மாஜினியின் சபதம்

1. பேரருட் கடவுள் திருவடி யாணை,
பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
தவப்பெய ரதன்மிசை யாணை
பாரவெந் துயர்கள் தாய்த்திரு நாட்டின்
பணிக்கெனப் பல்விதத் துழன்ற
வீரர், நம் நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெய ராணை.

2. ஈசனிங் கெனக்கும் என்னுடன் பிறந்தோர்
யாவர்க்கும் இயற்கையின் அளித்த
தேசமின் புறுவான் எனக்கவன் பணித்த
சீருய ரறங்களி னாணை,
மாசறு மென்நற் றாயினைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கும் இயற்கையா மன்றோ?
அத்தகை யன்பின்மீ தாணை.

3. தீயன புரிதல், முறைதவி ருடைமை,
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆயவற் றென்னெஞ் சியற்கையின் எய்தும்
அரும்பகை யதன்மிசை யாணை
தேயமொன் றற்றேன், நற்குடிக் குரிய
உரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூயசீ ருடைத்தாம் சுதந்திரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்.

4. மற்றை நாட்டவர்முன் நின்றிடும் போழ்து
மண்டுமென் வெட்கத்தி னாலே.
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்று
அச்செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனில்
ஆர்ந்தபே ராவலி னாலே.
நற்றவம் புரியப் பிறந்த தாயினுமிந்
நலனறு மடிமையின் குணத்தால்.

5. வலியிழந் திருக்கும் என்னுயிர்க் கதன்கண்
வளர்ந்திடும் ஆசைமீ தாலே.
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
மாண்பதன் நினைவின்மீ தாலே.
மெலிவுடன் இந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
வீழ்ச்சியி னுணர்ச்சிமீ தாலே.
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
புன்சிறைக் களத்திடை யழிந்தும்,

6. வேற்றுநா டுகளில் அவர்துரத் துண்டும்
மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்ற கிலாராய் எம்மரு நாட்டின்
அன்னைமார் அழுங்கணீ ராலே.
மாற்றலரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
வகுக்கொணுத் துயர்களி னாலே.
ஏற்ற இவ்வாலை யனைத்துமேற் கொண்டே
யான்செயும் சபதங்கள் இவையே.

7. கடவுளிந் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டளை தன்னினும் அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே பிறந்தவர்க் கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென் பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்,
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைக்கெனப் பணிப்பனேல் அதுதான்.

8. சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும்,
அமையுமத் திறமை ஜனங்களைச் சாரும்
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையு மில்லாது
தம்மருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செயத்தினுக் கதுவே
சூழ்ச்சியாம் என்பதை யறிந்தும்.

9. கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமாம் என்றும், ஒற்றுமை யோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே
பெருமைகொள் வலியாம் என்றுமே மனத்திற்
பெயர்ந்திடா உறுதிமேற் கொண்டும்,
அருமைசால் சபத மிவைபுரி கின்றேன்
ஆணைக ளனைத்துமுற் கொண்டே.

10. என்னுட னுத்த தருமத்தை யேற்றார்
இயைந்தஇவ் 'வாலிபர் சபை' க்கே
தன்னுடல், பொருளும், ஆவியு மெல்லாம்
தத்தமா வழங்கினேன்; எங்கள்
பொன்னுயர் நாட்டை ஒற்றுமை யுடைத்தாய்ச்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமோர் நாட்டின் சார்வில தாகிக்
குடியர சியன்றதா யிலக.

11. இவருடன் யானும் இணங்கியே யென்றும்
இதுவலாற் பிறதொழி லிலனாய்த்
தவமுறு முயற்சி செய்திடக் கடவேன்.
சந்ததஞ் சொல்லினால் எழுத்தால்,
அவமறு செய்கை யதனினால், இயலும்
அளவெலாம், எம்மவ ரிந்த
தவமுறு சபையி னொருபெருங் கருத்தை
தன்கிநின் அறிந்திடப் புரிவேன்.

12. உயரு மிந்நோக்கம் நிறைவுற 'இணக்கம்'
ஒன்றுதான் மார்க்கமென் பதுவும்,
செயம்நிலை யாகச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்கமென் பதுவும்,
பெயர்வற எங்கள் நாட்டினர் மனத்திற்
பேணுமா றியற்றிடக் கடவேன்;
அயலொரு சபையி லின்றுதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன்.

13. எங்கள்நாட் டொருமை எந்நாடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்களாக் கினைக ளனைத்தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன்;
இங்கென தாவி மாய்ந்திடு மேனும்
இவர்பணி வெளியிடா திருப்பேன்;
துங்கமார் செயலாற் போதனை யாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன்.

14. இன்றும்எந் நாளும் இவைசெயத் தவறேன்;
மெய்யிது, மெய்யிது; இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனேல் என்னை
ஈசனூர் நாசமே புரிக;
அன்றியும் மக்கள் வெறுத்தெனை இகழ்க;
அசத்திய பாதகஞ் சூழ்க;
நின்றதீ யெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தய்யா னுழலுக மன்னோ!

வேறு

15. பேசி நின்ற பெரும்பிர திக்கினை
மாசி லாது நிறைவுறும் வண்ணமே
ஆசி கூறி யருளுக! ஏழையேற்கு
ஈசன் என்றும் இதயத் திலகியே.

## 51. பெல்ஜியத்திற்கு வாழ்த்து

1. அறத்தினால் வீழ்ந்து விட்டாய்;
அன்னியன் வலிய னாகி
மறத்தினால் வந்து செய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்;
முறத்தினாற் புலியைக் காக்கும்
மொய்வரைக் குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச்
செய்கையால் உயர்ந்து நின்றாய்.

2. வண்மையால் வீழ்ந்து விட்டாய்;
வாரிபோற் பகைவன் சேனை
திண்மையோடு அடர்க்கும் போதில்
சிந்தனை மெலித லின்றி
ஒண்மைசேர் புகழே மேலென்று
உளத்திலே உறுதி கொண்டாய்;
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றாய்.

3. மானத்தால் வீழ்ந்து விட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட
வலிமைதான் உடைய னேனும்,
ஊனத்தால் உள்ள மஞ்சி
ஒதுங்கிட மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே
அவன்வழி யெதிர்த்து நின்றாய்

4. வீரத்தால் வீழ்ந்து விட்டாய்;
மேல்வரை யுருளுங் காலை
ஓரத்தே ஒதுங்கித் தன்னை
ஒளித்திட மனமொவ் வாமல்,
பாரத்தை எளிதாக் கொண்டாய்;
பாம்பினைப் புழுவே யென்றாய்;
நேரத்தே பகைவன் றன்னை
'தில்லென' முனைந்து நின்றாய்.

5. துணிவினால் வீழ்ந்து விட்டாய் ;
தொகையிலாப் படைக ளோடும்
பிணிவளர் செருக்கி னோடும்
பெரும்பகை எதிர்த்த போது
பணிவது கருத யாட்டாய் ;
பதுங்குதல் பயனென் றெண்ணாய்;
தணிவதை நினைக்க மாட்டாய்
'நில்' லெனத் தடுத்தல் செய்தாய்.

6. வெருளுத லறிவென் றெண்ணாய் ;
விபத்தையோர் பொருட்டாக் கொள்ளாய்;
சுருளலை வெள்ளம் போலத்
தொகையிலாப் படைகள் கொண்டே,
மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
" உருளுக தலைகள், மானம்
ஓங்குக" என் றெதிர்த்து நின்றாய்,

7. யாருக்கே பகையென் றாலும்
யார்மிசை இவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்தர வெண்ணி டாமல்,
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில் லாமல்
வெட்டுவேன் என்று நின்றாய்.

8. வேள்வியில் வீழ்வ தெல்லாம்
வீரமும் புகழும் மிக்கு
மீள்வ துண் டுலகிற் கென்றே
வேதங்கள் விதிக்கும் என்பர் ;
ஆள்வினை செய்யும் போதில்,
அறத்திலே இளைத்து வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக்
கிளர்ச்சிகொண் டுயிர்த்து வாழ்தல்.

9. விளக்கொளி மழுங்கிப் போக
 வெயிலொளி தோன்றும் மட்டும்
களக்கமா கிருளின் மூழ்குங்
 கனகமா ளிகையு முண்டாம்;
அளக்கருந் தீதுற் றாலும்
 அச்சமே யுளத்துக் கொள்ளார்;
துளக்கற ஓங்கி நிற்பர்;
 துயருண்டோ துணிவுள் ளோர்க்கே!

## 52. புதிய ருஷியா

### ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி

1. மாகாளி பராசக்தி உருசியநாட்
 டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
 கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
 பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
 வையகத்தீர், புதுமை காணீர்!

2. இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
 ஜாரெனும்பே ரிசைந்த பாவி,
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
 சான்றோரும்; தருமந் தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்;
 பொய்சூது தீமை யெல்லாம்
அரணியத்திற் பாம்புகள்போல் மலிந்துவளர்ந்
 தோங்கினவே அந்த நாட்டில்.

3. உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை;
 பிணிகள்பல வுண்டு; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
 ளுண்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு;
 தூக்குண்டே யிறப்ப துண்டு;
முழுதுமொரு பேய்வனமாஞ் சிவேரியிலே
 ஆவிகெட முடிவ துண்டு.

4. இம்மென்றால் சிறைவாசம்; ஏனென்றால்
வனவாசம்; இவ்வா றங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்,
அம்மைமனங் கனிந்திட்டாள்; அடிபரவி
உண்மைசொலும் அடியார் தம்மை
மும்மையினும் காத்திடுநல் விழியாலே
நோக்கினாள்; முடிந்தான் காலன்.

5. இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,
புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.

6. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்,
கிருதயுகம் எழுக மாதோ!

## 53. கரும்புத் தோட்டத்திலே

(ஹரிகாம்போதி ஜன்யம்)

**இராகம்:** ஸைந்தவி **தாளம்:** திஸ்ரசாப்பு

பல்லவி

கரும்புத் தோட்டத்திலே—ஆ!
கரும்புத் தோட்டத்திலே

சரணங்கள்

1. கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்து கின்றனரே!—ஹிந்து
மாதர்தம் நெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே!—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லையோ? ஒரு
மருந்திதற் கில்லையோ?—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின்றார், அந்தக் (கரும்புத்)

2. பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயும் இரங்கும் என்பார்; தெய்வமே! நினது
எண்ணம் இரங்காதோ?—அந்த
ஏழைகள் அங்கு சொரியுங் கண்ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ?—தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார், அந்தக் (கரும்புத்)

3. நாட்டை நினைப்பாரோ?—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே அன்னை
வீட்டை நினைப்பாரோ?—அவர்
விம்மிவிம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே—துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்க ளழுதசொல்
மீட்டு முரையாயோ?—அவர்
விம்மி யழவுந் திறங்கெட்டுப் போயினர் (கரும்புத்)

4. நெஞ்சங் குமுறுகிறார்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே அந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டுமடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ?—ஹே!
வீர கராளி, சாமுண்டி, காளீ! (கரும்புத்)

CONNEMARA PUBLIC LIBRARY